# உதயன்

சுடர் : 36 | கதிர் : 278 | வியாழக்கிழமை | ஆவணி 17ஆம் நாள் 02 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## தொற்று 3,828

கொழும்பு, செப். 2
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 3 ஆயி ரத்து 828 பேர் நேற்று அடையா

15

### தீவிரமடைகிறது கொரோனா

# வடக்கில் ஒரேநாளில் நேற்று 17 பேர் சாவு!

## 414 பேருக்குத் தொற்றுறுதி

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 02

கொரோனாத் தொற்றால் வடக்கு மாகாணத்தில் நேற்றுமட்டும் 17 பேர் உயிரிழந்துள்ளனர். 414 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத் தரப்பின் தகவல்கள் கூறுகின்றன.
யாழ்ப்பாண மாவட்டத்தில் 8 பேரும், கிளிநொச்சியில் இருவரும், வவுனியா மாவட்டத்தில் 7 பேருமாக 17 பேர் உயிரி ழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

15

## 115 ஆண்கள் உட்பட மேலும் 215 பேர் சாவு

கொழும்பு, செப். 2
இலங்கையில் மேலும் 215 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப் படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியி டப்பட்டுள்ளது.
இதற்கமைய நாட்டில் பதிவான

15

## மருதனார்மடத்தில் நேற்றிரவு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், செப். 2
மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோவிலுக்கு முன்பாக பழக்கடை நடத்துபவர் மீது நேற்றிரவு துரத்தித்துரத்தி வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
மருதனார்மடம் சந்தியில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் நின்றிருந்த வேளையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறப்பட்டது.
அதனால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

15

## நயினை பெருந்திருவிழா இந்த வருடம் இல்லை

யாழ்ப்பாணம், செப். 2
யாழ்ப்பாணம் நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம், இந்தவருடம் நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.
வரலாற்றுப் பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம் நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில், வருடாந்த மஹோற்சவம் கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவிருந்த நிலையில், கொரோனா அச்சம் காரணமாக

15

## அம்பனில் ஆயுதங்கள் மீட்பு



யாழ்ப்பாணம், செப். 2
வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் பெருமளவு ஆயுதங்கள் நேற்று இனங்காணப்பட்டுள்ளன.
தனியார் காணியில் மலசலகூட குழி வெட்டும்பொழுதே இந்த ஆயுதங்கள் இனங்காணப்பட்

15

## அவசரகாலச் சட்டத்தை உடனே இரத்துச்செய்க!

### சஜித் அணி போர்க்கொடி

கொழும்பு, செப். 2
அவசரகாலச் சட்டத்தை உடனடியாக இரத்துச்செய்து தொற்றுநோய்களைக் கையாள்வதற்கான ஏற்பாடுகளைக் கொண்ட அறிவிப்பை வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் அந்தக்கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு எண் 2243/01 மூலம், கொரோனாத் தொற்றுநோய்

15

## இரு நாள்களே சபை அமர்வு?

கொழும்பு, செப். 2
சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில், நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.
நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.
செப்ரெம்பர் மாதத்துக்கான முதல் வார நாடாளுமன்ற அமர்வை நடத்துவது தொடர்பில்

15

### அன்டிஜென் பரிசோதனையில்

## கிளிநொச்சியில் நேற்று 181 பேருக்குத் தொற்று

கிளிநொச்சி, செப். 2
கிளிநொச்சியில் நேற்று 181 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களாக நாளாந்தம் சுமார் 100 க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.
கொரோனா அதிகரித்து வருவதால், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுமாறு பொதுமக்கள் வலியுறுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-6)

### நேற்றுமுன்தினம்

## முல்லையில் நால்வர் சாவு

முல்லைத்தீவு, செப். 2
கொரோனாத் தொற்றால் முல்லைத்தீவில் நான்கு பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர். 41 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
வீடுகளில் உயிரிழந்த நிலையிலும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று உயிரி

15

### யாழ். மாவட்டத்தில்

## 24 மணித்தியாலங்களில் 286 தொற்றாளர்கள்

யாழ்ப்பாணம், செப். 2
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்றுமாலை 4 மணிவரையான 24 மணித்தியாலங்களில் 286 பேர் கொரோனாத் தொற்றாளர்

15

## அன்டிஜெனில் மட்டும் 161 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், செப். 2
யாழ்ப்பாண மாவட்டத்தில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ரீதியாக நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 161

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுவர் மன்றத்தால் தமிழருக்கு பலவீனமே!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

வவுனியா, செப். 2

**தமிழர்களுக்கு மத்தியஸ்தம் மட்டுமே தேவை, ஆனால் நடுவர் மன்றம் என்பது தமிழர்களை பலவீனப்படுத்தும் செயல் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா எங்கள் விவகாரங்களில் தலையிடும் வரை, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை கண்டுபிடிக்கும் எங்களின் போராட்டத்தை நாம் முன்னெடுப்போம்.

இலங்கை அரசாங்கத்தால் மாற்ற முடியாத ஒரு தீர்வை நாங்கள் விரும்புகிறோம். வடக்குகிழக்கில் உள்ள தமிழர்களுக்கு பாதுகாப்பான தமிழர் தாயக தீர்வு வழங்கப்படுமென்ற உத்தரவாதம் அளிக்க வேண்டும். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா என்பன மத்தியஸ்தம் செய்ய வேண்டும். நாம் நடுவர் மன்றத்தைக் கோரவில்லை. அது எம்மைப் பலவீனப்படுத்தும் செயல்.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், தமிழர் விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்யுமாறு அமெரிக்காவைக் கேட்க மாட்டேன். இலங்கை அரசுடன் மட்டுமே பேச்சு நடத்தப்படும் என்று தெரிவித்தார். அவர் எமது பிரதிநிதியாகத் தன் கருத்தை வெளிப்படுத்தவில்லை. போஸ்னியாவின் தீர்வு விவகாரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்களை எமக்கும் பாவித்து எம்மை ஏமாற்றப் பார்க்கின்றார்.

சர்வதேச விசாரணையை இல்லாமல் செய்த நபர்கள்தான் இவர்கள். இவர்களுக்கு வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்களைப்பற்றி பேசும் அதிகாரத்தை யார் கொடுத்தது?. எங்கள் போராட்டத்திற்கு விரைவான முடிவு கிடைக்க எல்லாம் வல்ல கடவுளை பிரார்த்திக்கிறோம் - என்றனர். (ம-110)

# கொரோனா தொடர்பான ஆலோசனை, குடிநீர் பெற பெயர், இலக்கங்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 2

கொவிட்-19 தொடர்பான சுதேச வைத்திய ஆலோசனைகளையும் நோய் தொடர்பான சுதேச மருத்துவம் சார்பான விழிப்புணர்வுகளையும் நோய் எதிர்ப்பு குடிநீர் பானங்களையும் பெற்றுக்கொள்ளும் முகமாக சமூக மருத்துவ உத்தியோகத்தர்களின் பெயர் மற்றும் அவர்களை தொடர்பு கொள்வதற்கான அலைபேசி இலக்கங்கள் சுதேச மருத்துவ திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளுக்கான அலுவலர்களில் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி,

**யாழ்ப்பாண மாவட்டம்**

நெடுந்தீவு - வைத்தியர் பெரோன் (0771856665), ஊர்காவற்றுறை - வைத்தியர் எஸ்.சபேசன் (0772615765), வேலணை - வைத்தியர் பி.கஜிதா (0779227511), யாழ்ப்பாணம் - வைத்தியர் ஜி.மிதுராஜா (0774660657), நல்லூர் - மருத்துவர் ஜே.எட்னா (0774400295), நல்லூர் - வைத்தியர் எஸ்.கீர்த்தனா (0778690086), உடுவில் - வைத்தியர் ஜே.றட்ணலகி (0779199359), உடுவில் - வைத்தியர் எஸ்.காயத்திரி (0776383673), சண்டிலிப்பாய் - வைத்தியர் எஸ்.உதயகொளரி (0773410352), சங்கானை - வைத்தியர் ஆர். கிரிஜா (0770566790), சங்கானை - வைத்தியர் எஸ்.மயூரா (0770690849), தெல்லிப்பழை - வைத்தியர் வை.சசிகலா (0779836099), தெல்லிப்பழை - வைத்தியர் எஸ்.றேக்கா (0767516435), வலி.கிழக்கு - வைத்தியர் கே.தக்சாயினி (0772269811), வலி.கிழக்கு - வைத்தியர் என்.வாரணி (0775354717) கரவெட்டி - வைத்தியர் ரி.கவிதா (0778448196), பருத்தித்துறை - வைத்தியர் கே.சூர்யா (0774911795), சாவகச்சேரி - வைத்தியர் கே.றஜிதா (0773662730), சாவகச்சேரி - வைத்தியர் ரி.ஜெனனி (0779548129)காரைநகர் - வைத்தியர் கே.நந்தகோபி (0777110695), காரைநகர் - வைத்தியர் எஸ்.சிந்து (0778649620)

**முல்லைத்தீவு மாவட்டம்**

புதுக்குடியிருப்பு - வைத்தியர் பி.ஹேமச்சந்திரா (0779955296), முள்ளியவளை - வைத்தியர் ஏ.ஆர்.எவ் றஸ்லீனா(0766894039), வெலிஓயா - வைத்தியர் லங்கா விஜேதுன்ஆராச்சி (0715420442), துணுக்காய் - வைத்தியர் கே.கிருசானி (0770783095), துணுக்காய் - வைத்தியர் டி.ஜெயராம் (0775586888),

**வவுனியா மாவட்டம்**

வவுனியா வடக்கு - வைத்தியர் ரி.ரணதுங்க (0717713931), வவுனியா வடக்கு - வைத்தியர் என்.தர்மதிலக (0766150383, வவுனியா வடக்கு - வைத்தியர் கே.தயபால (0712145031), வவுனியா தெற்கு - வைத்தியர் ஆர்.பண்டார (0710372984), வவுனியா தெற்கு- வைத்தியர் எஸ்.டி சில்வா (0703701938), வவுனியா நகர் - வைத்தியர் திருமதி ஆர். சிந்தியா ( 0712406043 ), வவுனியா நகர் - வைத்தியர் எச். ஹிரோசானி (0775511656), வவுனியா நகர் - வைத்தியர் எச். டி சொய்சா (0779826236), செட்டிகுளம்- வைத்தியர் எஸ்.பஹிமா (0772529595),செட்டிகுளம் - வைத்தியர் எவ்.ஹசீனா (0714042455),செட்டிகுளம் - வைத்தியர் எச். வசீமா (0779548129)

**மன்னார் மாவட்டம்**

முசலி - வைத்தியர் எப். சிப்ரா (0703233335), முசலி - வைத்தியர் திருமதி எஸ்.றஸ்பியா (0740308458), மடு - வைத்தியர் ரி.சனிகா (0713991142), மன்னார் - வைத்தியர் ஏ.லங்கேஸ்வரி (0773012082), மன்னார் - வைத்தியர் டினுசி சமரதுங்க (0715968598), மன்னார் மேற்கு - வைத்தியர் பெர்ணான்டோ (0715420376), நானாட்டான் - பாத்திமா றிஸ்னா (0719981786), நானாட்டான் - வைத்தியர் ஹசனா (0710929181

**கிளிநொச்சி மாவட்டம்**

பளை- வைத்தியர் எஸ்.நிறோசன் (0770782259), கண்டாவளை- வைத்தியர் பி.பிரமிலா (0771379627), கண்டாவளை - வைத்தியர் எஸ்.ஜான்சி (0765575500), கண்டாவளை - வைத்தியர் பி. மயூரதி (0771181227), கரைச்சி - வைத்தியர் வி. விஜிதா (0775958022), கரைச்சி - வைத்தியர் [illegible], கரைச்சி - வைத்தியர் [illegible] - வைத்தியர் கே.பிறேமறாகவன் (0776183118) (த)

# மைத்திரி இன்று விசேட உரை



கொழும்பு, செப். 2

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 70 ஆவது ஆண்டு விழா இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதன்போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட உரையாற்றவுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருவதால் இந்தமுறை பிரதான நிகழ்வுகள் எவையும் ஏற்பாடு செய்யப்படவில்லை. குருதிக்கொடை நிகழ்வையே கட்சி ஆதரவாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

எனினும், இன்று சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றி கட்சித் தலைமையகத்தில் குறிப்பிட்ட சிலரின் பங்குபற்றலுடன் விசேட கூட்டம் நடைபெறவுள்ளது எனத் தெரியவருகின்றது.

இந்தக் கூட்டத்தின்போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணி அரசுக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதென்ற தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது என அறியமுடிகின்றது.

அத்துடன், அரசிடம் சில யோசனைகளை முன்வைப்பதற்கும் இதன்போது முடிவெடுக்கப்படலாம்.

அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டும் என அந்தக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தி வருகின்றனர். அண்மையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திலும் இதனை வலியுறுத்தியுள்ளனர். எனினும், பெரும்பாலான உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து பயணிக்கும் நிலைப்பாட்டிலேயே உள்ளனர். (து-22)

# 'ஐ.தே.கவின் புதிய பயணம்' 5 ஆம் திகதி ரணில் உரை!



கொழும்பு, செப். 2

கட்சியின் புதிய பயணம் மற்றும் நாட்டை மீட்பதற்கான தேசிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 05 ஆம் திகதி சிறப்புரை யாற்றவுள்ளார் - என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"ஐக்கிய தேசியக்கட்சி உதயமாகி செப்ரெம்பர் 06 ஆம் திகதியுடன் 75 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இதனைமுன்னிட்டு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 'ஒன்லைன்' ஊடாக உரையாற்றவுள்ளார். மாலை 5 மணி முதல் 6 மணிவரை பேஸ்புக், யூடியூப் உட்பட சமூகவலைத்தளங்களில் உரை ஒளிபரப்பாகும். ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் இளம் தலைமுறையினருக்காகவே தலைவர் உரையாற்றுகின்றார். இதன்போது கட்சியின் புதிய பயணம் தொடர்பில் தெளிவுபடுத்துவார்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. சமூகக் கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது. எதிர்காலம் பற்றிய எதிர்ப்பார்ப்பு இளம் தலைமுறையினருக்கு இல்லாது போயுள்ளது.

எனவே, சுகாதாரம் தொடர்பான தேசிய வேலைத்திட்டம், பொருளாதாரத்தை மீட்பதற்கான தேசிய வேலைத்திட்டம், அறிவுசார் தேசிய வேலைத்திட்டம் உள்ளிட்டவற்றையும் அவர் முன்வைப்பார்.

நாட்டின் பொருளாதாரத்தை எம்மால் மீட்க முடியும். ஆனால் உயிரிழந்த மக்களை மீளப் பெறமுடியாது. எனவேதான் இன்னும் இரு வாரங்களுக்கு நாட்டை முடக்குமாறு கேட்கின்றோம்." - என்றார். (து-44)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாதத்தில்

# வவுனியாவில் 50 பேர் சாவு 3,328 பேருக்குத் தொற்று

**வவுனியா, செப். 2**

**வவுனியா மாவட்டத்தில் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மாத்திரம் 3 ஆயிரத்து 328 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன் 50 பேர் உயிரிழந்துள்ளனர்.**



வவுனியா மாவட்டத்தில் கடந்த காலங்களை விட தொற்று வீதம் அதிகரித்துச் செல்வதாகவும், அதிகளவான உயிரிழப்புக்கள் வீடுகளில் நிகழ்வதாகவும் சுகாதாரத் துறையினர் குறிப்பிடுகின்றனர்.
மக்கள் தொடர்ந்தும் நிகழ்வுகளில் ஒன்றுகூடும் செயற்பாடுகள் திரைமறைவில் இடம்பெறுகின்றன என்றும் முடக்கத்தையும் ஒழுங்குமுறையாகப் பின்பற்றவில்லை என்றும் சுட்டிக்காட்டும் சுகாதாரத் துறையினர் இது மாவட்டத்துக்கு ஆபத்தான போக்கு என்று எச்சரிக்கின்றனர். (ஒ.110)




# மேலும் இரு வாரங்கள் நாட்டை முடக்கவும்!

*இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து*

கொழும்பு, செப். 2




நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்கப்பட வேண்டும் என்று ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மருத்துவர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.
ஊரடங்குச் சட்டம் 6ஆம் திகதிக்கு பிறகும் நீடிக்கப்படுமா என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதி செயலணி இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்கும்.
ஆனால் மேலும் ஓரிரு வாரங்களுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டால் நல்லதென்பது எனது தனிப்பட்ட கருத்து. ஏனெனில் நாட்டில் இன்னும் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறையவில்லை. சமூகத்தில் பல தொற்றாளர்கள் இருக்கக்கூடும். இதனைக் கட்டுப்படுத்தவேண்டுமெனில் ஓரிரு வாரங்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் நீடிக்கப்படவேண்டும்- என்றார். (ஒ.44)

மன்னாரில்

# மின்தகன நிலையம் அமைக்க ரூ.50லட்சம்

மன்னார், செப். 2

மன்னாரில் மின்தகன நிலையம் அமைப்பதற்கு மன்னார் நகரசபையால் 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் வவுனியாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்குள்ள மின்தகன நிலையத்தில் வைத்தே எரியூட்டப்பட்டன.
இதனால் அங்கு இட மற்றும் நேர நெருக்கடிகள் நிலவின. இதனால், மன்னாரில் உயிரிழப்பவர்களின் சடலங்களை அங்கு வைத்தே எரியூட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
இதனால் மன்னாரில் ஒரு மின்தகன நிலையம் அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே மன்னார் நகர சபையால் குறித்த மின்தகன நிலையத்தை அமைப்பதற்காக 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.
இது தொடர்பில் மன்னார் நகரசபை தவிசாளர் ஞா.அன்ரனி டேவிட்சன் தெரிவிக்கையில்,
மன்னாரில் தற்போதைய கொரோனாத் தொற்று நிலையைக் கருத்திற் கொண்டு மின்தகன நிலையமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளது. கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களை வவுனியாவுக்குக் கொண்டு செல்வதில் உள்ள சிரமங்களைக் கருத்திற்கொண்டே இந்த மின்தகன நிலையம் அமைக்கப்படுகின்றது. இதற்காகவே 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார். (ம-213)



# அன்டிஜென் சோதனையில் யாழில் 270பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், செப். 2




யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் சோதனையில் 270பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 13பேருக்கும், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 44பேருக்கும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 40பேருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8பேருக்கும், காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9பேருக்கும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8பேருக்கும், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 28பேருக்கும், மருதங்கேணி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4பேருக்கும், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 16பேருக்கும், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 14பேருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 85பேருக்கும் என 270 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ-5)

# சிமெந்து விலை திடீர் அதிகரிப்பு

கொழும்பு, செப். 2

அண்மைக்காலமாக சிமெந்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் குற்றஞ்சாட்டியுள்ளனர். 950 ரூபா முதல் 1,000 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட சிமெந்து தற்போது ஆயிரத்து 100 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.
சீனி, பால்மா, எரிவாயு ஆகியவற்றுக்கு ஏற்கனவே தட்டுப்பாடு இருந்த நிலையில், தற்போது சிமெந்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனினும், சிமெந்தின் விலை அதிகரிப்புக்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்றும், அவ்வாறு அனுமதி வழங்கும் திட்டமும் இல்லை என்றும் நுகர்வோர் அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்தடை

**யாழ்.மாவட்டத்தில்** இன்று வியாழக்கிழமை 02ஆம் திகதி காலை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை யாழ் பிரதேசத்தில் ஐஸ்தொழிற்சாலை பொலிகண்டி, நெடியகாடு, பொலிகண்டி, வல்லிபுரம் நீர்வழங்கல் சபை, மந்திகை, அம்பன், அம்பன் மருத்துவமனை, கடற்கரை பகுதி மணற்காடு, குடத்தனை, குடத்தனைநீர்வழங்கல், மந்திகை, முள்ளி, நடுக்குடத்தனை, பொற்பதி, உபயகாதிர்காமம், வலிகண்டி, வல்லிபுரம் கோயில், கண்ணகி அம்மன் இறங்குதுறை, கரம்பன்மேற்கு, மெலிஞ்சினை ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** ரோட்மண்ட் எலக்ட்ரோ எலக்ட்ரிக்கல், குருக்கள் புதுக்குளம் மணியர்குளம், மணியர்குளம் (வீட்டுத்திட்டம்), நித்தியநகர், புதுக்குளம், ஆண்டியபுளியங்குளம், ரங்கீத்கம், சங்கராபுரம், வாரிக்குடியூர் ஆகிய இடங்களிலும், **மன்னார் மாவட்டத்தில்** டொன் பொஸ்கோ, செம்மண்தீவு நெற்களஞ்சியம், வங்காலை கடற்படைமுகாம், வங்காலை நீர்வழங்கல்சபை, அச்சம்குளம், அளவக்கை, ஆனால் நகர், வங்காலை, அறுகுக்குன்றுநொச்சிக்குளம், ஆவனம் வஞ்சியங்குளம், எருவிட்டான், மாவிலங்கேணி, முருங்கன்பிட்டி, நானாட்டான், நறுவிலிக்குளம், நெருவில்குளம், நானாட்டான் பிரதேச செயலக அலுவலகத்தடி, பள்ளகாமம், பள்ளங்கோட்டை, பிடாரிக்குளம், பூவரசங்குளம், சாளம்பன் நாகச்செட்டி, தோமஸ்புரி, உமணகரி, வாழ்க்கைப்பட்டாங்கண்டல் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# கேரளாவில் முறியடிக்கப்பட்ட கடத்தல் புலிகளை புத்துயிர்ப்பிக்க முயற்சியாம்

கொழும்பு, செப். 2

கேரளாவின், திருவனந்தபுரம் அருகே விழிஞ்சம் கடற்கரையில் 300 கிலோ ஹெரோயின் போதைப்பொருள், 5 ஏகே47 துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி கடத்தல் நடவடிக்கை புலிகளைப் புத்துயிர் பெறச்செய்வதை நோக்காகக் கொண்டது என்று இந்திய தேசிய புலனாய்வு நிறுவனம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

மார்ச் 18ஆம் திகதி கிடைத்த உள வுத்துறை தகவலொன்றைத் தொடர்ந்து, விழிஞ்சம் கடற்கரைக்கு அப்பால், இந்திய கடலோர காவல் படையால் இலங்கையில் பதிவுசெய் யப்பட்ட மீன்பிடிப் படகொன்று கைப் பற்றப்பட்டது. படகிலிருந்த 6 சிங்கள மீனவர்களும் கைது செய்யப்பட்ட னர். இந்த நடவடிக்கைக்கு மூளை யாக செயற்பட்டவர் இலங்கைத் தமிழரான சுரேஷ் ராஜன். கொழும் பில் வசிக்கும் அவர், சென்னை புறநகரான குன்றத்தூரில் சிறிது காலம் வசித்து வந்துள்ளார்.

வழக்கை விசாரித்த போதைப் பொருள் கட்டுப்பாட்டு பணியகம் முதலில், படகிலிருந்த 6 சிங்கள வர்கள் மீதும் குற்றப்பத்திரம் தாக் கல் செய்யவிருந்தது. எனினும், இந்திய தேசிய புலனாய்வு நிறுவ னம் மேலதிக விசாரணைகள் நடத் திய பின்னர், மேலும் ஆழ மான தகவல்கள் வெளிவந்துள் என என்று உளவுத்துறை வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில், ஓகஸ்ட் மாதம் கேர ளாவின் அங்கமாலியில் வைத்து ராஜன் கைது செய்யப்பட்டு புலிக ளுடன் தொடர்புடைய குழுக்களு டனான தொடர்புக்காக விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ளார். இந் திய தேசிய புலனாய்வு நிறுவனத் தின் விசாரணையின் பின்னர், பட கில் இருந்த செய்மதித் தொலை பேசி வழியாக டுபாயிலுள்ள குழுக் களுடன் தொடர்பு கொண்டதற்கான அறிவியல் ஆதாரங்கள் கிடைத் துள்ளன.

சுரேஷ் மற்றும் அவரது சகாவான சௌந்தரராஜன் ஆகியோரை கைது செய்வதற்கான ஆதாரங்கள் இதன்மூலமே பெறப்பட்டுள்ளன. கைதானவர்களுடன் தொடர்புடைய கேரளா, தமிழ்நாட்டு தங்குமிடங்க ளில் இந்திய தேசிய புலனாய்வு நிறுவனம் நடத்திய தேடுதலில், புலிகளுடன் தொடர்புடையவை உள்ளிட்ட பல ஆவணங்கள் கைப் பற்றப்பட்டன.

டுபாயில் கைது செய்யப்பட்ட பின் னர் இலங்கைக்கு அழைத்து வரப் பட்டு, பின்னர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட போதைப் பொருள் கடத்தல்காரரான மாக்கந் துர மதுஷை, சுரேஷ் டுபாயில் சந்தித் துப் பேசியதற்கான ஆதாரங்க ளுமுள்ளதாக தமிழக உளவுத்துறை தெரிவித்துள்ளது. விடுதலைப் புலி களின் அனுதாபமுள்ள, அந்த அமைப்பை மீளுருவாக்க வேண்டு மென செயற்படும் குழுக்களுடன் ராஜன் மற்றும் சௌந்த ரராஜன் ஆகியோர் தொடர்பில் இருந்தமைக் கான ஆதாரங்களுள்ளதாக தமி ழக உளவுத்துறை தெரிவித்துள் ளது. (ம)



# வயற் காணியில் 7 குண்டுகள் மீட்பு

கிளிநொச்சி,செப்.2

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வன்னேரிக்கு ளம் பகுதியில் வயல் நிலத்தைப் பண்படுத்திய போது 7 கைக்குண்டுகள் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இது தொடர்பில் காணி உரிமையாளர், அருகில் உள்ள இராணுவத்தினருக்குத் தகவல் வழங்கினார். இராணுவத்தினர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கி யதை அடுத்து, பொலிஸார் கைக்குண்டுகளைப் பாதுகாப்பாக அடையாளப்படுத்தி, அவற்றை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பில் நீதிமன்றில் அனுமதி பெறப்பட்டு, விசேட அதிரடிப்படையினர் மூலம், அவற்றைப் பாது காப்பான முறையில் அகற்றி, செயலிழக்க செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4,6)



# கடத்தலில் ஈடுபட்ட ஆறு பேர் கைது

கிளிநொச்சி, செப். 2

சுண்டிக்குளம், இராமநாதபுரம், கல்மடுநகர் பகுதிக ளில் அனுமதிப் பத்திரம் இன்றி மற்றும் மரம் என்பவற்றுடன் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுண்டிக்குளம் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இரு டிப்பர் சாரதிகளும், இராமநாத புரத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய 2 டிப்பர் சாரதிகளும், கல்மடுப் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிய ஒரு டிப்பர் சாரதியும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் தரு மபுரம் பொலிஸாரிடத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளனர். சான்றுப் பொருள்களும் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளன. அத்துடன் கல்மடுப் பகுதியில் சட்டவி ரோதமாக மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற நபரொரு வரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-113)



# முதியோர் இல்லத்துக்கு அத்தியாவசியப் பொதி

மன்னார்,செப்.2

மன்னார் பட்டித்தோட்டத்தில் இயங்கி வரும் முதியோர் இல்லத்துக்கு, 74 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தி யாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங் கப்பட்டன.

தேசிய சமாதான பேரவை மற்றும் தொடர்பாடலுக்கான பயிற்சி மையம் ஆகியன இணைந்து இந்தப் பொதி களை வழங்கின.

அவற்றை மன்னார் பிரதேச சர்வமத பேரவையினர் முதியோர் இல்லத்தில் கையளித்தனர். (ஒ-4,60)

# மருத்துவமனைக் கழிவுகள் திறந்தவெளியில் எரிப்பு

### மக்கள் சுவாசிப்பதற்கு சிரமம்

சாவகச்சேரி,செப்.2

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேகரிக்கப் படும் அனைத்துக் கழிவுகளும் வளாகத்தில் காணப் படும் திறந்த வெளியில் எரிக்கப்படுகின்றன. இவற் றால் வெளிவரும் புகையைச் சுவாசிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

மருத்துவமனை வளாகத்தில் சேகரிக்கப்படும் குப்பை கள் தினமும், நகரசபை வாகனம் மூலம் அகற்றப்ப டுகின்றன. எனினும் மருத்துவமனை வெளிநோயா ளர் பிரிவு மற்றும் விடுதிகள் போன்றவற்றில் தினமும் சேகரிக்கப்படும் கழிவுகள், வளாகத்தில் டச்சு வீதியை அண்டிய பகுதியில் வெட்டப்பட்டுள்ள குழி யில் போடப்பட்டு வாரத்தில் ஒரு நாள் எரிக்கப்படுகின் றன. இதனால் அயலில் உள்ள குடியிருப்புக்கள் மற்றும் வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்கள் துர்நாற்றப்புகையை சுவாசிக்க வேண்டியுள்ளது.

மருத்துவமனை வளாகத்தில் இருந்த எரியூட்டி 5 வருடங்களுக்கு முன்னர் வெடிப்புகள் ஏற்பட்டு பழு தடைந்துள்ளது. புதிய எரியூட்டி அமைத்து வழங்கு மாறு சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவித்த போதிலும், இதுவரை எரியூட்டி அமைக்கப்பட வில்லை.

மருத்துவமனைக் கழிவுகளை வெளி இடங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடாது என்பதற்காக மருத்துவ மனை வளாகத்தில் குழி தோண்டி, கழிவுகள் எரியூட் டப்படுகின்றன.

மருத்துவமனையின் பல்வேறு கழிவுகள் (கொரோ னாத் தடுப்பூசி வெற்றுப் போத்தல்கள், ஊசி போடும் சிறிஞ்ச் மற்றும் ஏனைய ஊசி மருந்துகள்) எரியூட் டப்படுகின்றன.

எனவே சுகாதாரத் திணைக்களத்தினர் அல்லது மருத் துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் புதிய எரியூட்டியை அமைத்து வழங்கினால், சிரமங்களைத் தவிர்க்க முடியும் என்று மக்கள் தெரிவித்துள்ளன ர். (ஒ-4,9)

# நாட்டை முன்னேற்ற தேரரின் அறிவுரை

கொழும்பு,செப்.2

இலங்கையில் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால், நாட்டில் மூவின மக்களும் நிம்மதியாக வாழ முடியாது. நாடும் முன்னேற் றமடையாது என்று கரவிலக்கொட் டுவ தம்மதிலக தேரர் தெரிவித் துள்ளார்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட் டோர் தினத்தை முன்னிட்டு இடம் பெற்ற, இணையவழி கலந்துரை யாடலில் அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போர் முடிவு பெற்று 12 ஆண்டுகள் கடந்த நிலையில், இன்னும் காணா மல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இது எமது நாடு உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் முன்செல்ல முடி யாமல் இருப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

போரால் சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் பாதிக்கப்பட் டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்க ளுக்கு இறப்புச் சான்றிதழ், நஷ்ட ஈடு மட்டும் வழங்காது, பொது மன்னிப்பு ஒன்றைக் கேட்பதாலும் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரமுடியும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு முறை யான நீதியும், இனி அவ்வாறான தொரு நிலை ஏற்படாதிருக்கச் செய்யக்கூடிய அனைத்து வழிக ளையும் மேற்கொள்ள வேண்டும். ஆகவே காணாமல் ஆக்கப்பட்டோ ரின் பிரச்சினைக்குத் தீர்வு காணா மல் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது மிகவும் சுலபமான விடய மல்ல - என்றார். (ஒ-4,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதற்குமேல் முடியாது - தீர்வையேற்று இன்றுமுதல் சேவையை ஆரம்பிக்கவும்

## அதிபர் ஆசிரியர்களிடம் அரசு கோரிக்கை

கொழும்பு, செப். 2

**அதிபர்-ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காணா முற்படுகையில் ஏனைய தொழிற்சங்கங்க ளும், தமது தேவைப்பாடுகள் தொடர்பில் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன. இப்படி இருந்தும் ஆசிரியர்களின் பிரச்சி னைக்கு அரசு முன்னுரிமை வழங்கியது. எனவே, நாளை (இன்று) முதல் நிகழ்நிலைக் கல்விச் சேவையை ஆரம்பிக் குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.**



அரச தகவல் திணைகளத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறி யவை வருமாறு.

நாட்டிலுள்ள ஆசிரியர்களின் சம் பளத்துக்காக மாதாந்தம் 119 பில் லியன் ரூபா செலவிடப்படுகின் றது. இந்நிலையில் சுபோதினி அறிக்கையிலுள்ள பரிந்துரையை எடுத்துக்கொண்டால் மேலதிகமாக 71 பில்லியன் ரூபா செலவாகும். இலங்கை போன்ற நாடுகளுக்கு இதனை தாங்கிக்கொள்ள முடி யாது. அத்துடன், சுபோதினி அறிக் கைக்கு அதிபர்களின் இணக்கப் பாடும் இல்லை. சுபோதினி அறிக் கையில் சில சாதகமான விடயங் கள் இருந்தாலும் அது முழுமை யானதொரு அறிக்கை அல்ல. சாதகமான விடயங்கள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்தினோம். சம்பள ஆணைக்குழு 8 பில்லி யன் ரூபாவையே முன்வைத்தது. கல்வி அமைச்சு இப்பிரச்சினைக்கு தீர்வாக 15 பில்லியனை முன்மொ ழிந்தது. இவை இரண்டையும் நாம் நிராகரித்தோம். 32 பில்லி யனை ஒதுக்குமாறு பரிந்துரைத் தோம். இதன்படி அதிபர் - ஆசிரி யர்களின் சம்பளத்துக்காக தற் போது ஒதுக்கப்படும் தொகையை விட எதிர்காலத்தில் 32 பில்லியன் மேலதிகமாக ஒதுக்கவேண்டிவ ரும். அதுமட்டுமல்ல இதர தேவை களுக்காகவும் பல பில்லியன் களை ஒதுக்கவேண்டும்.

அரச வருமானத்தில் 85 வீதம் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கும், ஓய்வூதியம் வழங்குவதற்கும் செலவாகின்றது. எனவே, நெருக்கடி நிலைமையில் தான் நாம் இருக்கின்றோம். அப் படி இருந்தும் அதிபர் ஆசிரியர்க ளின் பிரச்சினைக்கு முக்கியத்து வம் வழங்கப்பட்டது. அதன் அடிப் படையில்தான் இந்தத் தீர்வு முன் வைக்கப்பட்டது.

5ஆயிரம் ரூபா கொடுப்பனவு எமது உப குழுவால் முன்வைக் கப்பட்ட யோசனை அல்ல. அதிபர் ஆசிரியர்களின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என் பதற்கான சான்றாகவே அந்த தொகையை வழங்குவதற்கு நிதி அமைச்சர் முன்வந்தார்.

ஒரே தடவையில் சம்பளத்தை வழங்கமுடியுமா என கேட்கின்ற னர். அவ்வாறு வழங்கமுடிந்தால் சிறப்பு. ஆனால் தற்போதைய சூழ் நிலையில் அதனை செய்யமுடி யாது. நிதிப் பிரச்சினைக்கு மத்தியி லும் மாணவர்களின் நலன் கருதி ஆசிரியர்களின் பிரச்சினைக்கு முதலிடம் வழங்கினோம். ஏனைய தொழிற்சங்கங்கள் தமது தேவை கள் தொடர்பில் அரசுக்கு எச்சரிக் கைகளை விடுத்திருந்தாலும் அவற்றை ஒதுக்கிவைத்துவிட்டு, இதற்கு முக்கியத்துவம் வழங்கி னோம்.

எம்மால் முடிந்த தீர்வு முன்வைக் கப்பட்டுள்ளது. எனவே, அதனை ஏற்று நாளையே (இன்று) கற்பித் தல்நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு கேட்கின்றோம்- என்றார். (ஒ-44)

# உள்ளூர்ப் பொறிமுறையை நிராகரித்தமை சரியே

## கோத்தாவின் கூற்று அதையே எடுத்துக்காட்டுகிறது என்கிறார் சுகாஸ்

யாழ்ப்பாணம், செப். 2

உள்ளக விசாரணைப் பொறிமுறை மற்றும் காணா மல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிராகரித்திருந்தது. அந்த முடிவு சரியானதுதான் என்பதை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவினது கருத்து வெளிப்படுத்திநிற்கின்றது. இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் க.சுகாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ன காரணத்துக்காக காணாமல் ஆக்கப்பட்டனர் என விசா ரிக்கத் தேவை இல்லை. அதைக் குற்றமாகக் கருதத் தேவையில்லை. ஆனால் அதனால் ஏற்பட்ட இழப்புக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்று ஜனாதிபதி கோத் தாபய ராஜபக்ச அடிக்கடி அமைச்சரவையில் குறிப் பிடுவார் என நீதி அமைச்சர் அலி சப்ரி மெய்நிகர் வழியிலான கலந்துரையாடலில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே சுகாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியினதும் நீதி அமைச்சரினதும் அறிவிப்பை அடியோடு நிராகரிக்கின்றோம். சர்வதேச விசாரணை மூலம் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதோடு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே எமது உறுதியான மாறாத நிலைப்பாடு.

உள்ளக விசாரணையையும் காணாமலாக்கப்பட்டோ ருக்கான அலுவலகத்தையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிராகரித்தமை மிகச்சரியான முடிவென் பது மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

அரசினதும் சிங்களக் கட்சிகளினதும் உண்மை முகத்தை இப்போதாவது புரிந்து, அவர்களோடு சேர்ந்து வரலாற்றுத் துரோகங்களைப் புரிபவர்கள் தயவுசெய்து சரியான தடத்துக்குத் திரும்புங்கள். அல்லது தமிழினத்தை அழித்தவர்களுக்குத் துணை போனவர்கள் பட்டியலில் நிச்சயம் நீங்களும் வரலாற் றில் இடம்பெறுவீர்கள் - என்றார். (ஓ-இ)

# மாணவர்களுக்காக ஆசிரியர்கள் தங்கள் புறக்கணிப்பை முடிப்பார்கள்

## நம்புகிறது அரசு



கொழும்பு, செப். 2

ஒரு சில தொழிற்சங்கங்களால் இந்நாட் டிலுள்ள ஒட்டுமொத்த அதிபர் ஆசிரியர் சமூகத்தை ஆட்டுவிக்க முடியாது. அர சால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட் டம் தொடர்பில் மேற்படி தொழிற்சங்கங் கள் தமக்கு தேவையான வகையிலேயே தகவல்களை பரிமாறியுள்ளன. உண்மை நிலைவரத்தை நாம் தெளிவுபடுத்திவிட் டோம். எனவே, ஒரு சில தொழிற்சங்கங்கள் என்ன முடிவை எடுத்தாலும், அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களுக்காக கல்வி நடவடிக்கையை முன்னெடுப்பார்கள் என நம்புகின்றோம். இவ்வாறு அதிபர் - ஆசிரியர் சேவைகளில் காணப்படும் சம்பளப்பிரச்சினைகளுக்குத் தீர்வை முன் வைப்பதற்காக நியமிக்கப்பட்ட அமைச் சரவை உப குழு உறுப்பினரான அமைச் சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட் டின்போது, 'அமைச்சரவை உப குழு வால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வை அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்கங்கள் நிராகரித் துள்ளன. அப்படியானால் அர சின் மாற்று நடவடிக்கை என்ன, ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மீள சேவைக்கு அழைக்கப்படுவார்களா?' என்று எழுப் பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறி யவை வருமாறு,

'இல்லை. அரசால் வழங்கப்பட்டுள்ள தீர்வு தொடர்பில் ஒரு சில தொழிற்சங் கங்கள் தமக்குத் தேவையான விதத்தில் தான் அதிபர், ஆசிரியர்களுக்கு தகவல் களை பரிமாறியுள்ளன. எனவேதான் இந்த ஊடக சந்திப்பை நடத்தி உண்மை நிலைவரத்தை தெளிவுபடுத்துகின் றோம். ஒரு சில தொழிற்சங்கங்களால் இந்நாட்டிலுள்ள அதிபர் ஆசிரியர் சமூ கத்தை ஆட்டுவிக்கமுடியாது. மனநிலை மையை மாற்றவும் முடியாது.

மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக் கையை முன்னெடுக்க வேண்டும் என் பதையே பெரும்பாலான அதிபர், ஆசி ரியர்கள் விரும்புகின்றனர். அவ்வாறா னவர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருந் தோம். இன்னமும் இருக்கின்றோம். அதனால்தான் இரு வாரங்களுக்குள் அமைச்சரவைக்கு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தோம்.

இன்று நாம் தீர்வுத் திட்டம் தொடர்பில் உண்மை நிலைமையை தெளிவுபடுத்தி யுள்ளோம். எனவே, சில தொழிற்சங்கங் கள் எத்தகைய முடிவை எடுத்தாலும், அந்தத் தீர்மானத்தை எதிர்த்தேனும் மாணவர்களின் கல்விக்காக அதிபர், ஆசிரியர்கள் முன்னிலையாவார்கள் என நம்புகின்றோம். எனவே, கலக்கம டைய வேண்டியதில்லை.

அதிபர் - ஆசிரியர் சேவைகளில் காணப் படும் சம்பளப் பிரச்சினை 24 வருடப் பிரச்சினையாகும். இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற உறுதிமொழி சுபீட்சத்தின் எதிர்கால நோக்கு தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டிருந்தது. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் அமைந்த எமது முதலாவது அரசில் கல்வி அமைச்சராக டலஸ் செயற்பட் டார். அவரும் அமைச்சரவை பத்திரங் களை முன்வைத்தார்.

எனினும், ஜனாதபதி பதவியேற்று மூன்று மாதங்களின் பின்னர் கொரோனாத் தொற்று ஏற்பட்டது. இதனால் இலங்கை யில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் பாதிப்புகள் ஏற்பட்டன. வருமான இழப் புகள் ஏற்பட்டன. எல்லாப் பிரச்சினை களைவிடவும் சுகாதாரப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அதற் காக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட் டன. தற்போதும் அதே நிலைமை காணப்படுகின்றது.

அப்படி இருந்தும் அதிபர், ஆசிரியர்க ளின் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்ப தற்கு 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஊடாக அதற்கான நட வடிக்கை எடுக்கப்படும் எனத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது. சம்பள விடயம் மட் டுமல்ல இதர யோசனைகளும் முன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை செயற் படுத்துவதற்கு 6 மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்குப் பகுதியில் உள்ள மாணவர்கள் நிகழ்நிலைக் கல்வியைப் பெறுகின்ற னர். கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை மாணவர்களும் பயன் அடைகின்றனர். தனியார் பாடசாலை மாணவர்களும் நிகழ்நிலைக் கல்வியைப் பெறுகின்ற னர். ஒரு தரப்பு மாணவர்களுக்கு மட் டுமே அநீதி இழைக்கப்படுகின்றது. எனவே, தீர்வை ஏற்று அதிபர் - ஆசிரி யர் பணியை ஆரம்பிப்பார்கள் என நம்புகின்றோம். - என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளாந்த வருமானம் இழப்பு நன்னீர் மீனவர்கள் பாதிப்பு

கிளிநொச்சி,செப்.2

அக்கராயன் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்கு, நாளாந்தம் வருமானம் போதியளவு கிடைக்கப்பெறாமை காரணமாக, பொருளாதாரரீதியாகப் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இந்தப் பகுதியில் 40 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நன்னீர் மீன்பிடியை நம்பி வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது குளத்தில் முதலைகளின் பெருக்கம் மற்றும் குளத்தின் உட்பகுதியில் காணப்படுகின்ற மரக்கட்டைகள் மற்றும் கடும் காற்று காரணமாக மீன்பிடி வலைகள் சேதமடைந்து வருகின்றன. இதனால் போதியளவு வருமானம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. கூடுதலான தொழிலாளர்கள் நுண்கடன் நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் என்பவற்றில் கடன்களைப் பெற்று தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் அவர்கள் எதிர்பார்க்கும் வருமானம் கிடைப்பதில்லை.

ஒரு கிலோ அல்லது இரண்டு கிலோ மீன் மட்டுமே அவர்களது வலைகளில் அகப்படுகின்றது. இதனால் 300 ரூபாவே வருமானமாகக் கிடைக்கப் பெறுகின்றது.

தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளதால், தமக்கான நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஒ-4-113)

ஒரு மாதத்தில் மட்டும்

# கிளிநொச்சியில் 35 பேர் சாவு 4 ஆயிரம் பேருக்கு தொற்று



கிளிநொச்சி, செப். 2

**கொரோனாத் தொற்றுக் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில் 35 பேர் உயிரிழந்ததுடன் 4 ஆயிரத்து 80 பேர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த காலங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் தொற்றாளர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தது. கடந்த ஒரு மாதமாக திடீரென தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.**

இந்த நிலையில் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும், சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேவையற்ற நடமாட்டங்கள், கொண்டாட்டங்களைத் தவிர்க்குமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக இறுதிச் சடங்குகளில் மக்கள் கூடுகை அதிகரிக்கின்றமையை உணர முடிவதாகவும், இந்நிலை தொடர்ந்தால் பாரதூரமான ஆபத்தான நிலை ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொற்றாபத்திலிருந்து பாதுகாக்க தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுமாறும், விட்டமின் சி அடங்கிய பழங்கள் மற்றும் உடன் மரக்கறி வகைகளை உணவாக எடுத்துக் கொள்ளுமாறும் அவர் அறிவுரை வழங்கியுள்ளார்.

தனி மனித பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்பு என்பனவே மாவட்டத்தின் அபாய நிலையிலிருந்து மீள்வதற்கு சிறந்த வழிகள் எனவும், அதை உணர்ந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஒ-6)



சிங்கராஜ வனத்தை ஊடறுத்து

## வீதி அமைக்கும் பணி பூர்த்தியாகும் நிலையில்!

கொழும்பு, செப். 2

உலக பாரம்பரியத்துடன் தொடர்புடைய சிங்கராஜ வனத்தின் லங்காகமவிலிருந்து நெலுவவுக்கான வீதி அமைக்கும் பணிகளில் 98 வீதமானவை முடிவடைந்துவிட்டன என்று நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வீதி அமைக்கப்படும்போது, அதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கின. வீதிக்காக மரங்கள் வெட்டப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை முன்வைத்தன. மரங்கள் வெட்டப்படவில்லை. காட்டுக்கு எந்தச் சேதமும் இல்லாமல் வீதி அமைக்கப்படும் என்று நான் வாக்குறுதி வழங்கினேன்.

வீதி அமைப்புப் பணிகளை வந்து பார்வையிடுமாறும் வலியுறுத்தினேன். ஆனால், வீதி அமைப்புப் பணிகளை பார்வையிடுவதற்குப் பதிலாக அந்த அபிவிருத்தியைக் குழப்பவே அவர்கள் விரும்பினார்கள்.

இன்று நான் சொன்னதைப்போன்றே வனத்துக்கு எந்தச்சேதமும் இல்லாமல் வீதி அமைக்கப்பட்டுள்ளது - என்றார்.

(ம-20)

## கட்டுப்பாடுகளை நீக்கினாலும் பாதுகாப்பை கைவிடமுடியாது

மருத்துவர் ஆலோசனை

கொழும்பு,செப்.2

நாட்டில் நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாடுகளை நீக்கினாலும், மக்களின் பாதுகாப்பு விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக சுற்றுலாத்துறையை மீள ஆரம்பிக்கும் போது அறிவியல் முறையின் அடிப்படையில் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் உயிரணு உயிரியல் பிரிவு பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதுள்ள கட்டுப்பாடுகளை நீக்கிய பின்னரே, நாம் சுற்றுலாத் தொழிலைத் தொடங்க வேண்டும். இவை அனைத்தும் அறிவியல் பின்னணியுடன் செய்யப்பட வேண்டும். அனைத்து வரம்புகளும் நீக்கப்படும்போது, அது ஓர் அறிவியல் முறையின்படி செயற்பட வேண்டும். மீண்டும் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை. மனித உயிர்கள் மற்றும் உலகப் பொருளாதாரத்தில் வைரஸ் தொற்று பெரும் தாக்கத்தை செலுத்தியுள்ளது.

நாங்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்ய விரும்புகின்றோம். எனவே எதிர்பாராத அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நாம் நன்கு தயாராக இருக்க வேண்டும் -என்றார்.

(ஒ-4)

ஜப்பானில் உள்ள

## இலங்கைத் தூதரகத்தால் நடமாடும் சேவை முன்னெடுப்பு

கொழும்பு, செப். 2

ஜப்பானில் உள்ள இலங்கைத் தூதரகம் அங்குள்ள இலங்கை மக்களுக்காக பல்வேறு சேவைகளை அண்மையில் முன்னெடுத்துள்ளது.

ரோக்கியோவில் இருந்து சுமார் 600 கிலோமீற்றர் தொலைவில் இந்தச்சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல், கடவுச்சீட்டுக்களைப் புதுப்பித்தல், பிறப்புப் பதிவு, உறுதிமொழிப் பத்திரம் மேற்கொள்ளல் உள்ளிட்ட சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட்டன.

(ம)

## முறிகண்டியின் நிர்வாகத்தை கிளிநொச்சியுடன் இணைக்குக

மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை

கிளிநொச்சி,செப்.2

முறிகண்டி பிரதேசத்தின் நிர்வாகக் கட்டமைப்பை கிளிநொச்சி மாவட்டத்துடன் இணைக்கவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர்கள் தெரிவிக்கையில், முறிகண்டிப் பிரதேசத்தில் இறக்கும் மக்களின் உடல்களை கொரோனாத் தொற்றுப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டியுள்ளது. அதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படுவதில்லை. இதனால் வறுமையில் உள்ள மக்கள் 58 கிலோமீற்றர் தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. அங்கு முடிவுகளைப் பெற்று சடலத்தைப் பெற்றுக் கொள்ள 3 நாள்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

இதனைத் தவிர்ப்பதற்கு மாங்குளம் மருத்துவமனையைப் பலப்படுத்தி, அங்கு பி.சி.ஆர்.பரிசோதனையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது முறிகண்டிப் பிரதேசத்தை கிளிநொச்சி மாவட்டத்துடன் இணைக்க வேண்டும். இந்தப் பிரதேச மக்கள் நுகர்வு, பாடசாலை மற்றும் மருத்துவமனை உள்ளிட்ட தேவைகளுக்கு கிளிநொச்சிக்கே செல்கின்றனர். ஆனால் நிர்வாகச் செயற்பாடுகளுக்காக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கும் செல்ல வேண்டியுள்ளது. எனவே மக்களின் நிர்வாக இலகுபடுத்தலுக்காக குறித்த பகுதியை கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்துடன் இணைப்பதே பொருத்தமானது -என்றனர்.

(ஒ-4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாவரும் கேளிர்!

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈழத் தமிழர்களின் விவகாரத்தில் அண்மையில் மேற்கொண்ட சில நகர்வுகள் திருப்தி தரும்வகையில் அமைந்துள்ளன. தமிழகத்தில் அமைக்கப்பட்டிருந்த ஈழத் தமிழ் அகதிகளுக்கான மையத்தை பெயர்மாற்றியமை, அவர்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்கியமை உள்ளிட்ட செயற்பாடுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது ஏதோவொரு நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றதுதான். ஆனால், அந்த நம்பிக்கையைத் தக்கவைக்கக்கூடிய வகையில் ஈழத்தில் இருக்கக்கூடிய எமது அரசியல் தரப்புக்கள் தி.மு.க. அரசுடன் இரண்டறக் கலந்து – பிணைந்து தமிழர்களின் விடிவை நோக்கிப் பயணப்படுகின்றனவா? என்ற கேள்விக்கான பதிலை சுய பரிசீலனை செய்யவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலத்தைத் தடுக்க திராவிட முன்னேற்றக் கழகம் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டு அந்தக் கட்சியின் மீது முன்வைக்கப்படும் பொத்தம்பொதுவானதும் மிகப் பெரியதுமான குற்றச்சாட்டு. ஆனால், இந்த 2009ஆம் ஆண்டையும் அதற்கு அண்மித்த காலப் பகுதிகளையும் நீக்கிவிட்டுப் பார்த்தால் ஈழத் தமிழர்களின் போராட்டத்துடன் தி.மு.க. இரண்டறக் கலந்துள்ளமை தெட்டத்தெளிவு. 13ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, 1989ஆம் ஆண்டு நவம்பரில் ஆட்சிக்கு வந்த கருணாநிதியின் ஆட்சி, 1991ஆம் ஆண்டு ஜனவரியில் கலைக்கப்பட்டது. இதற்குப் பின்னணியில் தி.மு.கவின் ஈழப்போராட்ட ஆதரவே காணப்பட்டது.


இலங்கைத் தமிழர்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சி அதிகாரத்துக்குச் செல்லும் தரப்பினரே மக்களின் நலன்களைப் புறந்தள்ளி கட்சி நலன், தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தி செயற்படுகையில் பிராந்திய நாட்டில் காணப்படும் அரசியல் கட்சி இலங்கைத் தமிழர் நலனை முன்னிறுத்தி மாத்திரம் செயற்படவேண்டும். இல்லையேல் முழுமையாக எதிர்ப்போம் என்பது மடமைத்தனம். ஏனெனில், அந்தக் கட்சி இன்னொரு நாட்டின் சட்டதிட்டங்களை, இயல்புகளை, கொள்கைகளைக் கவனித்து அதற்கேற்பவும் செயற்பட வேண்டிய தார்மீகக் கடமை – பொறுப்பு உள்ளது. ஒருவகையில் இது அழுத்தமும்கூட.

ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஈழத் தமிழர்கள் விடயத்தில் திடீர் என்று இந்த விட்டுக்கொடுப்புக்களைச் செய்யவில்லை. தமிழகத்தில் தேர்தல் பரபரப்புக்கள் இடம்பெற்றபோதே ஸ்டாலின் ஈழத் தமிழர்களை அரவணைக்கும் போக்கை வெளிப்படையாகக் கைக்கொண்டார். தனது தேர்தல் அறிக்கையின் ஒரு பகுதியில், 'திராவிட முன்னேற்றக் கழகமும் ஈழத் தமிழர்களும்' என்ற கொள்கையை ஸ்டாலின் உட்புகுத்தினார். தேர்தலில் வெற்றிபெற்று முதலமைச்சரானதும் இதுவரையில் இருந்த 'வெளிநாடுவாழ் இந்தியர்கள் நலன்' என்ற துறையை மாற்றி 'வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன்' என புதிய துறையை உருவாக்கியிருந்தார். இவையெல்லாம் ஈழத்தமிழர் நலன் சார்ந்த நகர்வுகள்தான்.

ஆனால், இந்த மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் எமது அரசியல் தலைவர்கள் கூர்ந்து அவதானிக்கவில்லை என்பதுதான் உண்மை. இந்த மாற்றங்களின் தொடர்சியாகத்தான் தற்போது அகதிகள் முகாமுக்கான பெயர் மாற்றமும், நிதி ஒதுக்கீடும் அமைந்துள்ளதே தவிர இதுவொன்றும் திடீர் புகுத்தல் இல்லை.

கேள்வி என்னவென்றால், இத்தகைய மாற்றங்களை ஈழத் தமிழர்களுக்குச் சாதகமாக நடைமுறைப்படுத்திவரும் ஸ்டாலினுடன் எத்தனை தடவைகள் இங்குள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் சந்திப்பை நடத்தின?, எத்தனை தடவைகள் இணையவழிச் சந்திப்பை நடத்தின?, எத்தனை தடவைகள் தொலைபேசியில் பேச்சு நடத்தின?.

எமது அரசியல் தலைமைகளின் ஆகப்பெரும் அரசியல் நடவடிக்கையே 'அறிக்கை'களுடன் முடிந்துபோய்க் கன காலம். 2009ஆம் ஆண்டு வரலாற்றை மாத்திரம் தூக்கிப் பிடித்துக் கொண்டிராது அனைவரும் எம் உறவுகளே என்ற கொள்கையின் கீழ் உரிமையுடன் ஒன்றித்தலே தமிழர்களின் மீள்எழுச்சிக்கு ஒரே வழி. அதுவே யதார்த்தமும்.




# மக்களே கொரோனாக் காவிகள் முடங்கினால் தொற்றுக் குறையும்

## கூறுகிறார் பொலிஸ் பேச்சாளர்

**கொழும்பு, செப். 2**

**வடக்கு, கிழக்கில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், சாவு எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றன. கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் நோய்க் காவிகள் பொதுமக்களே. எனவே, பொதுமக்கள் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மதிக்கவேண்டும். வெளியில் நடமாடாது இருந்தால் மட்டுமே இந்தத் தொற்றுப் பரவல் முடிவுக்கு வரும். இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- பொதுமக்களே ஏதேனும் அத்தியாவசிய தேவைகள் இருந்தால் மட்டும் வீடுகளிலிருந்து வெளியேறுங்கள். இதன்போது வீதிச்சோதனைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸாருக்கு நீங்கள் பயணிப்பதற்கான காரணத்தைக் கூற வேண்டியது அவசியம். போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி பயணிப்பவர்களும் உள்ளனர். எனவே, இவ்வாறானவர்களை இனங்காண்பதற்காக



பொலிஸார் பல கேள்விகளைக் கேட்பர். எனவே, அதற்கான ஒத்துழைப்பை பொலிஸாருக்கு வழங்கிச் செயற்படுமாறு வடக்கு - கிழக்கு மக்களைக் கோருகின்றேன். இதுவரை மக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கியே செயற்படுகின்றனர். தொடர்ந்தும் அவ்வாறு செயற்படுமாறே பொதுமக்களைக் கோருகின்றோம். அதேபோன்று தடுப்பூசி வழங்கலிலும் வடக்கு, கிழக்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிச் செயற்படுகின்றனர் என்று குறித்த மாகாணங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள மூத்த பொலிஸ் அதிகாரிகள் எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர் - என்றார். (ஓ-22)

# பி.சி.ஆர். சோதனையில் வடக்கில் 58பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 58 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 368 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போதே 58 பேருக்குத் தொற்று உறுதியானது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 8 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 5 பேருக்கும், சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைகளில் தலா 2 பேருக்கும், மருதங்கேணி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12பேருக்கும், மன்னார் மாவட்ட மருத்துவமனையில் 2 பேருக்கும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 4 பேருக்கும், பளை பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், மல்லாவி ஆதார மருத்துவமனையில் 5 பேருக்கும், வவுனியா மாவட்ட மருத்துவமனையில் 3 பேருக்கும், பூவரசங்குளம் மருத்துவமனையில் 2 பேருக்கும், புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் 8 பேருக்கும் என வடக்கில் 58 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 வீதமானவர்களுக்கே 2,000 ரூபா கொடுப்பனவு

## கிடைக்காதோர் மேன்முறையீடு மேற்கொள்ளலாம்

கொரோனாத் தொற்றுக் காலத்தில் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்காக வழங்கப்படும் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இதுவரை 50 வீதமானவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டலுவல்கள் இரா ஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை இந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதி பெற்றிருந்தும், இதுவரையில் கொடுப்பனவு கிடைக்கப்பெறாதவர்கள் பிரதேச செயலகத்தில் மேன் முறையீடு செய்ய முடியும் என்று அமைச்சின் செய லாளர் என்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் நட வடிக்கையின், முன்னேற்றம் தொடர்பில் உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச, அமைச்சின் செயலாளர் சித்ரானந்தவுடன் நிகழ்நிலை தொழில்நுட்பம் ஊடாக கலந்துரையாடினார்.

இந்தக் கொடுப்பனவை தகுதியுடைய குடும்பங் களுக்கு விரைவில் செலுத்தி முடிக்குமாறு இராஜாங்க அமைச்சர் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக் குப் பணிப்புரை விடுத்தார்.

18 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ஒ-4)

### யாழ்ப்பாண மாவட்டத்தில்

# பயணத் தடைக்குள்ளும் போக்குவரத்து அதிகம்!

## பொலிஸாரும், இராணுவத்தினரும் அசமந்தம் எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 2

**நாடளாவிய ரீதியில் பயணத்தடை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் பொதுமக்களின் போக்குவரத்து அதிகரித்துள்ளது. பொலிஸாரும் இராணுவத்தினரும் அசமந்தப் போக்கில் உள்ளமையாலேயே இந்தநிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண் மைக்காலமாக கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்து வருகின்றது.

இதனால் மக்கள் தேவையற்ற போக்குவரத்துக்களை மேற் கொள்ளவேண்டாம் என்று எச்சரிக் கப்படுகின்றது. எனினும், இந்த எச்சரிக்கைகள் புறந்தள்ளப்பட்டு மிகவும் சாதாரணமாக பொதுமக் கள் நடமாடித் திரிகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

எனவே இராணுவத்தினரும், பொலிஸாரும் இது விடயத்தில் கூடுதல் அக்கறையுடன் செயற் பட்டு யாழ்ப்பாணத்தில் கொரோ னாத் தொற்றைக் கட்டுப்படுத்த வழி வகைகளை ஏற்படுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டுள் ளது. (ம-26)

# சுகாதார அமைச்சின் - முன்னாள் பேச்சாளர் பொய்யுரைக்கிறார்!

கொழும்பு,செப்.2

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தைரோக் சின் என்னும் மருந்தின் தரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட சுகாதார அமைச்சின் முன்னாள் பேச்சாளர் மருத்துவர் ஜயருவன் பண்டாரவுக்கு எதிராக, புலனாய்வுப் பிரி வில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

தைரோக்சின் என்னும் மருந்தின் தரம் தொடர் பில், அண்மையில் யூடி யூப் வலையமைப்பின் ஊடாக மருத்துவர் ஜய ருவன் பண்டார கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த மருந்தை உட் கொண்டவர்கள் அதன் மூலம் தமக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என்று கூறினரென தெரிவித்தி ருந்தார்.

இந்தக் கருத்து முற்றி லும் பிழையானது. இந்த மருந்து இன்னமும் சந் தையில் விற்பனை செய் யப்படவில்லை.

இரத்மலானையில் உற் பத்தி செய்யப்படும் இந்த மருந்து செப்ரெம்பர் மாதத்தில் சந்தையில் விற்பனை செய்யத் திட் மிடப்பட்டிருந்தது.

நோயாளிகள் தெரிவித்த னர் என்று குறித்த மருத் துவர் வெளியிட்ட கருத்து முற்றிலும் பொய்யா னது என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரி வித்துள்ளார். (ஒ-4)

# ஒட்சிசனின் இறக்குமதி அரசு தீவிரகவனம்

கொழும்பு,செப்.2

நாட்டின் ஒட்சிசனின் தேவை அதிகரித் துச் செல்லும் நிலையில், தேவையான ஒட்சிசனை பெற்றுக் கொள்வதற்கு உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் ஜேர்மன் கைத்தொ ழில் மற்றும் வாணிப பிரிவு பிரதிநிதிக ளுடன், 'சூம்' தொழில்நுட்பத்தின் மூலம் மேற்கொண்ட கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா ஒழிப்பு நடவடிக்கைக ளுக்காக பல்வேறு நாடுகளும் இலங் கைக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றன. அதற்காக அந்தந்த நாடு களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். தற்போது நாட்டின் சுகாதார தேவை தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

அதற்குத் தேவையான நிதி வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஒட்சிசன் இன்றி எந்த ஒரு நோயாளி யும் இறப்பதற்கு ஒரு போதும் இடமளிக் கப் போவதில்லை என்றும் அவர் தெரி வித்தார். (ஒ-4)

# கணவன்மாரின் தாக்குதல் 30 பெண்கள் பாதிப்பு

## ஒரே மருத்துவமனையில் சேர்ப்பு

கொழும்பு,செப்.2


தத்தம் கணவர்களால் தாக்கப்பட்டு பாதிப்புக்குள்ளான 30 பெண்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டுள்ள கடந்த 10 நாள்களில் இந்தச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதே காலப்பகுதியில் மதுபோதையில் ஏற்பட்ட தகராறுகளில் காயமடைந்த 150 பேர் கொழும்பு தேசிய மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் 30 பெண்கள் தங்கள் கணவன்மாரால் தாக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் அயலி லுள்ளவர்களுடனான தகராறால் காயமடைந்த ஆண்கள். இவர்களில் 100 க்கும் மேற்பட்டோர் வீட்டில் விழுந்து, தீக்கா யம் அடைந்துள்ளனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அனைவரும் 23 முதல் 70 வயதுக்குட்பட்டவர்கள். இவர்கள் கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வசிப்பவர்கள் என்று மருத்துவமனைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

# கொரோனாத் தொற்றால் 188 பேருக்கு தீவிர சிகிச்சை



கொழும்பு,செப்.2

கொரோனாத் தொற்றால் பாதிக் கப்பட்டுள்ள 188 பேர் மருத்துவ மனைகளின் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஒட்சிசனின் துணை யுடன் ஆயிரத்துக்கும் மேற்பட் டோர் சிகிச்சை பெற்று வருகின்ற னர் என்று சுகாதார அமைச்சின் கொவிட் - 19 ஒழிப்பு தொடர்பான இணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கொரோனாத் தொற்றாளர்களுக்காக 39 ஆயிரத்து 160 கட்டில்கள் காணப் படுகின்றன. தற்போது 34 ஆயிரத்து 800 கட்டில்களில் தொற்றாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் 40 ஆயிரத்து 353 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அதேவேளை 14 ஆயிரத்து 154 தொற்றாளர்கள் வீடுகளி லேயே தனிமைப்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகின்ற னர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

# எவ்வித கட்டணங்களுமின்றி சடலங்களை எரியூட்டுங்கள்

## மாக்ஸ்சிச கட்சி கோரிக்கை

கொரோனாத் தொற்றுப் பேரிடரைக் கருத்தில் கொண்டு, உயிரிழப்பவர்களின் சடலங்களை எவ்வித கட்டணங்களுமின்றி எரியூட்ட நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று புதிய ஜனநாயக மாக்ஸ்சிச லெனினிசக் கட்சியின் வன்னி மாவட் டங்களின் செயலாளர் நி.பிரதீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனாத் தொற்றால் வன்னி மாவட்டங்களிலும் இறப்புக் கள் அதிகரித்துள்ளன.

இறப்பவர்களின் உடல்களை அடக்கம் செய் வதற்கு குறைந்தது 50 ஆயிரம் ரூபா வரை செலவு செய்யப்படுகின்றது. இறப்பவர்களின் அதிகமானோர் சாதாரண குடும்பங்களைச் சேர்ந் தவர்களாகவே இருக்கின்றனர். வவுனியா பூந் தோட்டத்தில் அமைந்துள்ள நகரசபைக்கு சொந் தமான எரிவாயு மயானத்தில் ஒரு சடலத்தை எரியூட்டுவதற்கு 7 ஆயிரம் ரூபா அறவிடப்படு கின்றது. இது நிறுத்தப்பட்டு எதுவித கட்டணமும் இன்றி சடலங்கள் எரியூட்டப்பட வேண்டும்.

இறப்பவர்கள் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந் தவர்களாக இருப்பின், கிராம சேவையாளர் சான்றிதழ் வழங்கும் பட்சத்தில் கட்டணமின்றி உடல்களை எரியூட்ட முடியும் என்று வவுனியா நகரசபை நிர்வாகம் தெரிவிக்கின்றது. இது மரத் தில் இருந்து வீழ்ந்தவரை மாடு ஏறிமிதிப்பது போன்றதாகிவிடும். குறித்த விடயத்தில் மாகாண, உள்ளூராட்சி அமைச்சு உரிய முடிவை எடுக்க வேண்டும் என்றார். (4-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 73 இராணுவத் தளபாடங்களை கைவிட்டுத் திரும்பியது அமெ.

## அனைத்தும் செயலிழக்கச் செய்யப்பட்டன

**வொஷிங்டன், செப். 2**

**ஆப்கானிஸ்தானில், விமானங்கள், கண்காணிப்பு விமானங்கள், ஏவுகணைத் தடுப்புக்கள், ரேடர்கள் என்று 73 இராணுவத் தளபாடங்களை அமெரிக்கா கைவிட்டுத் தாயகம் திரும்பியுள்ளது. அனைத்தும் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன. அவற்றை அமெரிக்காவைத் தவிர வேறு எந்த அமைப்பாலும், நாட்டாலும் மீண்டும் செயற்படவைக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



அமெரிக்காவுக்கும் தலிபான்களுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின்படி அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து முழுவதுமாக வெளியேறிவிட்டன. இவ்வாறு வெளியேறும்போது பெறுமதிமிக்க விமானங்கள் உட்பட 73 இராணுவத் தளபாடங்களை ஆப்கானிஸ்தானிலேயே அமெரிக்கா கைவிட்டுச் சென்றுள்ளது.

இவற்றில் 48 வாகனங்கள் முன்னதாகவே செயலிழக்கச் செய்யப்பட்ட போதிலும், ஏவுகணைத் தடுப்பு அமைப்புக்கள், ரேடர்கள் என்பன அமெரிக்கப் படைகள் புறப்படுவதற்கு சில மணிநேரத்துக்கு முன்னதாகவே செயலிழக்க வைக்கப்பட்டுள்ளன. இவை செயலிழந்த பின்னர் அமெரிக்கப் படைகளின் பலம் பாதியாகக் குறைந்துவிடும் என்பதாலேயே அமெரிக்கப் படைகள் வெளியேறும் நேரம் அடிக்கடி மாற்றப்பட்டுக்கொண்டு இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், அமெரிக்கா எதற்காக இராணுவத் தளபாடங்களை அங்கேயே கைவிட்டுத் திரும்பியது என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. கைவிடப்பட்ட ஆயுதங்களின் ஒட்டுமொத்தப் பெறுமதி சுமார் 75 மில்லியன் அமெரிக்க டொலர். இவ்வளவு பெருந்தொகைப் பெறுமதியுள்ள ஆயுதங்களை அமெரிக்கா கைவிட்டமைக்கு கனதியான பின்புலம் இருக்க வேண்டும், என்றும் தொலைநோக்குத் திட்டங்கள் ஏதும் அமெரிக்காவால் வகுக்கப்பட்டிருக்கலாம் என்றும் சர்வதேச அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ம)



# இராணுவத் தளபாடங்களை உடன் திரும்பப் பெறுங்கள்

## பைடனுக்கு ட்ரம்ப் அழுத்தம்



வொஷிங்டன், செப். 2

பைடன் தலைமையிலான நிர்வாகம், மிக மோசமான வகையில் ஆப்கானிஸ்தான் போரைக் கையாண்டுள்ளது. வரலாற்றில் இது ஒரு கறுப்புப் புள்ளி. ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா விட்டு வந்துள்ள ஆயுதங்கள் உடனடியாகத் திரும்பப் பெறப்படவேண்டும் என்று அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ட்ரம்ப் மேலும் தெரிவிக்கையில், ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிய விதம் அதிருப்தி தருகின்றது. உண்மையில் அமெரிக்கா தோற்றுவிட்டது. வரலாற்றிலே ஜோ பைடன் நிர்வாகம் ஒரு போரை மோசமாகக் கையாண்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் இருக்கும் அனைத்து ஆயுதங்களையும் உடனடியாக அமெரிக்காவுக்குக் கொண்டுவர வேண்டும். அல்லது அவற்றை வெடிக்கச் செய்து அழிக்க வேண்டும் - என்றார். (ம)

# அந்நியப் படைகளுக்கு இந்த வெற்றி ஒரு பாடம்

## தலிபான்கள் திமிர்த்தனம்

காபூல், செப். 2

எமது வெற்றி அந்நியப் படைகளுக்கு ஒரு பாடம் என்று காபூல் விமானநிலைய ஓடுதளத்தில் நின்றபடி தலிபான் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் கடந்த 15ஆம் திகதியன்று முழுமையாக தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதன்பின்னர் அங்கிருந்து ஒரு லட்சத்துக்கும் மேலானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர். ஓகஸ்ட் 31ஆம் திகதியுடன் அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து முழுமையாக வெளியேறிவிட்டனர். இந்த நிலையிலேயே, அமெரிக்கப் படைகள் இறுதியாக நிலைகொண்டிருந்த காபூல் விமான நிலையத்தில் வைத்து ஆப்கானிஸ்தான் செய்தித் தொடர்பாளர் இவ்வாறு அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'இஸ்லாமிய ஆப்கான் அமீரகம் இனி சுதந்திரமான நாடு. இதில் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டாம். அமெரிக்கா தோற்றுவிட்டது. எங்கள் நாட்டின் சார்பாக நாங்கள் உலகின் பிற நாடுகளுடன் நல்லுறவைப் பேண விரும்புகிறோம். ஆப்கான் மக்களின் சுதந்திரம் போற்றப்படும். இஸ்லாமிய சட்டங்களுக்கு உட்பட்டு ஆட்சி நடைபெறும். நமது வெற்றி அந்நியப் படைகளுக்கு ஒரு பாடம். தலிபான் படைகள் கண்ணியமாக நடந்து கொள்ளும்' என்றார். (ம)



ஆப்கானிஸ்தானில்

# ஒரு கோடி குழந்தைகளுக்கு உடனடி உதவிகள் தேவை!


தலிபான்களின் பிடியில் சிக்கியுள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு உடனடியாக மனிதநேய அடிப்படையில் உதவிகள் தேவைப்படுகின்றன என்று யுனிசெப் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக தலிபான்களுக்கும், அரசுப் படைகளுக்கும் இடையிலான போரில் குழந்தைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டில் மட்டும் 550 குழந்தைகள் துப்பாக்கிச் சூட்டிலும், குண்டுவீச்சி லும் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட குழந்தைகள் உடல் உறுப்புக்களை இழந்து படுகாயமடைந்துள்ளனர். இந்த நிலையில், யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தலிபான்களின் கொடுமையான ஆட்சிக்கு அஞ்சி ஆப்கான் மக்கள் தங்கள் குழந்தைகளுடன் வேறு நாடுகளுக்கு அகதிகளாகச் சென்று வருகின்றனர். பதற்றமும், அமைதியற்ற சூழலும் நிலவுவதால் குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை சுகாதார உரிமைகள் முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆப்கானிஸ்தானில் மட்டும் ஒரு கோடி குழந்தைகளுக்கு உடனடியாக மனிதநேய உதவிகள் தேவை - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுக்குமொழிப் பேச்சுக்கு சொந்தக்காரர் ஆலாலசுந்தரம்



சண்முகலிங்கம் சுரேஸ்குமார்
நல்லூர் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தராகவும் சிறந்த குற்றவியல் சட்டத்தரணியாகவும் திகழ்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு ஆலாலசுந்தரத்தின் 36ஆவது சிராத்த தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

யாழ்ப்பாண மாநகரத்தின் தலைநகராம் நல்லூர்ப் பதிதனிலே வாழ்ந்த முருகேசு - தங்கம்மா தம்பதிக்கு 1936ஆம் ஆண்டு புத்திரனாக வந்துதித்தவரே ஆலாலசுந்தரம். சிறுவயதில் கல்வியிலும் கவின்கலைகள் நாடகம் ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டவராய் விளங்கித் தனது பள்ளிப்படிப்பை முடித்து இந்தியா சென்று பட்டப் படிப்பையும் மேற்கொண்டு தாய் நாடு திரும்பிச் சட்டத்துறையில் கொண்ட ஈடுபாடு காரணமாக சட்டம் பயின்று சட்டத்தரணியாக வெளியேறினார். தன்னுடைய அடுக்கு மொழிப் பேச்சுக்களால் 'அடலேறு ஆலாலு" என்று அழைக்கப்பட்டார்.

இளம்பராயத்திலே சிறந்த பேச்சாளராக விளங்கினார் என்பதனை இலங்கை நாடாளுமன்றத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவராகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகவும் விளங்கிய அ.அமிர்தலிங்கம் அவர்கள் எழுதிய விடுதலை நெருப்புக்கள் என்ற புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"யாழ்.மாநகர சபைத்தேர்தலில் 1951 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி முதன்முதலில் போட்டியிட்ட போது எமது தேர்தல் மேடைகளில் ஒரு சிறுவன் அழகான அடுக்கு மொழியில் ஆணித்தரமாகப் பேசினான். அதுவே ஆலாவின் அரசியற் பிரவேசமாகும்.." என இவரது இளவயதுத் திறமை பற்றிக் கூறியுள்ளார்.

அரசியலில் ஈடுபாடு கொண்ட காரணத்தால் தலைவர் அமிர்தலிங்கம் நல்லூர்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் நாகநாதன் ஆகியோருடன் மிகவும் நெருங்கிப் பழகினார். தேர்தல் மேடைகளில் தமிழ் அரசுக் கட்சிப் பேச்சாளராக இவர் விளங்கியமை, மற்றும் இவரது பேச்சைக் கேட்கவென ஆதரவாளர் கூட்டம் எத்தனை மணியானாலும் காத்திருப்பர் என்ற வரலாறுகள் இவர் திறமையை வெளிக்காட்டுகின்றன.

பல பொது வேலைகளிலும் சரி நாடக நடிகனாகவும் நாடகாசிரியராகவும் தமிழ் உணர்வை இளைஞர்கள் மத்தியில் ஊட்டி வளர்க்கும் உணர்வாளராக விளங்கியமை என்று இவர் ஒரு தமிழ் இனப் பற்றாளன் என்பதனைக் காட்டி நிற்கிறது.

சட்டத்துறையில் சிறந்த குற்றவியல் சட்டத்தரணியாக விளங்கியதும் இவர் பேசும் வழக்குகள் அனேகமாக வெற்றி பெறுவதும் அக்காலத்தில் இவரது சட்டப் புலமையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பெடுத்து சங்க வளர்ச்சியில் அயராது பாடுபட்டதுடன் சங்கத்துக்கென நிலையான கடைத்தொகுதிகளைக் கொண்ட இரண்டு மாடிக்கட்டடத்தை அமைத்த சிறப்பு இவரையே சாரும். தற்போது காங்கேசன்துறை வீதியில் ரில்கோ ஹொட்டலுக்கு முன்னால் இந்தப் பெரிய கட்டடத்தின் முகப்பில் இவரது பெயர் தாங்கிய கல்வெட்டு இப்போதும் இவரை நினைவூட்டுவதாக உள்ளது.

தனது அரசியலின் அதீத ஈடுபாடு காரணமாக 1970ஆம் ஆண்டு கிளிநொச்சித் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்திருந்த போதும் கட்சிப்பணிகளில் சற்றும் குறைவின்றி செயற்பட்டதும் கட்சிக்காகவும் தமிழ் மக்களின் உரிமைக்காக உழைக்கும் தொண்டனாகவும் தொடர்ந்து செயற்பட்டார். கோப்பாய்த் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளையின் மறைவை அடுத்து அவரது இடத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி இவரை நாடாளுமன்ற உறுப்பினராக அனுப்பியது.

1981ஆம் ஆண்டு ஜூலை 23 இல் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றம் சென்றார்.

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது பல கோரிக்கைகளை முன்வைத்துத் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குச் செல்லாது புறக்கணிப்புச் செய்தார்கள். அந்த வகையில் தொடர்ந்து 3 மாதங்கள் நாடாளுமன்றம் செல்லாத காரணத்தால் இவரது பதவி உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் அனைவரது பதவிகளும் 1983ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22 இல் பறிபோயின.

"
சட்டத்துறையில் சிறந்த குற்றவியல் சட்டத்தரணியாக விளங்கியதும் இவர் பேசும் வழக்குகள் அனேகமாக வெற்றி பெறுவதும் அக்காலத்தில் இவரது சட்டப் புலமையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பெடுத்து சங்க வளர்ச்சியில் அயராது பாடுபட்டதுடன் சங்கத்துக்கென நிலையான கடைத் தொகுதிகளைக் கொண்ட இரண்டு மாடிக் கட்டடத்தை அமைத்த சிறப்பு இவரையே சாரும்.

தொடர்ந்து ஜூலைக் கலவரத்தை அடுத்து பல முக்கிய தமிழ்த் தலைவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றார்கள். இவர் உட்பட ஒரு சிலரே இங்கு தங்கி இருந்தனர். 1985ஆம் ஆண்டு நல்லூர் கல்வியங்காடு செங்குந்தாச் சந்தைக்கு அருகில் வீட்டில் இருந்த இவரை இனம் தெரியாத ஆயுததாரிகள் கடத்திச் சென்று படுகொலை செய்தனர்.

தமிழ் மண்ணுக்காகவும் உரிமைக்காகவும் ஓங்கி ஒலித்த குரல் 1985ஆம் ஆண்டு செப்ரெம்பர் 2ஆம் திகதி அடங்கியது. கூடவே சக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கமும் இவருடன் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த மண்ணுக்காகவும் தமிழ் இனத்தின் விடுதலைக்காகவும் அரசியல் பரப்பில் கோலோச்சிய முருகேசு ஆலாலசுந்தரம் ஆற்றிய சேவைகள், பணிகள் என்பவற்றை மனங்கொண்டு அவரது ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போம்.

## முல்லைத்தீவில் திங்களன்று 2ஆவது டோஸ்

முல்லைத்தீவு,செப்.2

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றவர்களுக்கு, எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் இரண்டாம் டோஸ் செலுத்தப்படும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு தெரிவித்துள்ளது.

முதல் டோஸைப் பெற்றுக் கொண்ட நிலையங்களில், இரண்டாம் டோஸைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,4,19)

## இணையவழி கதையாடல்

கொழும்பு,செப்.2

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும், இணையவழி அரங்கக் கதையாடல் 9 நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும்.

புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், ஆசிரியர் அழகு தனு மட்டக்களப்பு அடிப்புற அரங்கச் செயற்பாட்டு அமைப்பின் செயற்பாடுகளும், இராமநாடகக் கூத்தின் ஆற்றுகை அனுபவப் பகிர்வும் எனும் தலைப்பில் கதையாடவுள்ளார்.

நிறைவுரையைப் புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் ஆற்றுவார்.

ஆர்வமுடையவர்கள் சூம் செயலி இலக்கம் 73534935699 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,4)

## 20 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதி

கொடிகாமம்,செப்.2

தொடர் முடக்கத்தால் வருமானம் இழந்துள்ள 20 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி சிவன்கோவிலடி, மண்டுவில், நுணாவில் மத்தி பகுதியைச் சேர்ந்த 20 குடும்பங்களுக்குப் பொதிகள் வழங்கப்பட்டன. இதற்கான நிதியுதவியை லண்டன் தஸ்மி என்ரபிறைசஸ் நிறுவனத்தினர் வழங்கினர். (4,159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச் சுற்றாடலில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்

## யாருக்கும் உள்நுழைய அனுமதியில்லை என்கிறார் பொலிஸ் பேச்சாளர்

**கொழும்பு, செப். 2**

**நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்தத் திருவிழாவுக்குப் பொலிஸார் எப்போதும் ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுவர். கோயில் வளாகத்தில் பொலிஸார் நிறுத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.**

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்தத் தேர்த்திருவிழாவுக்கு பொலிஸாரின் ஒத்துழைப்பு மற்றும் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:


நல்லூர் முருகன் கோயிலின் வருடாந்தத் திருவிழா என்பது, யாழ்ப்பாணத்தில் விசேடமாக வடக்கு இந்து மக்களின் விசேட பெருவிழாவாகும். இந்த வருடாந்த மகோற்சவத்தை நடத்துவதற்காக முழுமையான ஒத்துழைப்பு இலங்கை பொலிஸாரால் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது நிலவும் நெருக்கடிச் சூழலில், சுகாதார ஆலோசனைகளுக்கு அமைவாக இம்முறை நல்லூர் வருடாந்தத் திருவிழாவானது கோயிலுக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கோயிலை அடிப்படையாக வைத்து தொண்டாற்றிவரும் பூசகர்கள் மற்றும் பூசை வழிபாடுகளை நடத்துவதற்கு உதவுபவர்கள் மட்டுமே பங்குபற்றும் வகையில் நல்லூர் வருடாந்த உற்சவம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று கோயில் வளாகத்தில் பொலிஸார் நிறுத்தப்பட்டு கோயில் வளாக பூமியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. நல்லூர் கோயிலுக்குள் உட்பிரவேசிக்கும் வீதிகளில் வீதித் தடைகள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் கோயிலுக்குள் உட்பிரவேசிக்க முடியாத வகையில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்ட பிரதேசங்கள் அல்லாத பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ஒ.22)

# அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் ஏற்பட்ட மாற்றம்




கொழும்பு, செப். 2

இலங்கையில் கடந்த ஓராண்டில் பொருள்களின் விலைகளின் அதிகரிப்புத் தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறையின் தரவுகளின்படி, கடந்த ஓராண்டில் பல அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. அமெரிக்க டொலர் விகிதம் அதிகரிப்பு உட்பட்ட பல காரணங்களால் இவ்வாறு விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அத் திணைக்களம் வெளிப்படுத்தியுள்ளது. (ஒ.இ)

# கொரோனாவைக் கட்டுப்படுத்த கிராம ரீதியாக குழுக்கள் தெரிவு

கிளிநொச்சி,செப்.2

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், கிராம ரீதியாகக் குழுக்களைத் தெரிவு செய்து கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலாளர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில், மெய்நிகர் தொடர்பாடல் மூலம் நடத்தப்பட்ட விசேட கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் வேலைப்பளுவைக் குறைக்கும் வகையில் கிராம மட்டத்தில், கிராம அலுவலர் தலைமையில் குழுக்களைத் தெரிவு செய்து, நோயாளர்களைத் தனிமைப்படுத்தல், நோயாளர்களைப் பராமரித்தல், உணவுப்பொதி வழங்கல் உள்ளிட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்று கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின், சடலங்களைப் பேணுவதற்கு குளிரூட்டி பொருத்தப்பட்ட கொள்கலன்களைப் பெற்றுக்கொடுத்தல், வெளிமாவட்ட சுகாதாரப் பணியாளர்களுக்கு தங்குமிட வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், சடலங்களை எரிப்பதற்கான மின்தகன வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கான உணவுப்பொதிகளை உரிய நேரத்தில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் உள்ளிட்ட விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடலில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர், கடற்றொழில் அமைச்சின் மேலதிக இணைப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள மாவட்டப் பணிப்பாளர், மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள், சுகாதாரத்துறை சார்ந்தவர்கள் பங்கேற்றனர். (ஒ.4,13)

# கோரிக்கைகளை நிறைவேற்றும்வரை தொழிற்சங்கப் போராட்டம் தொடரும்

## ஆசிரிய சேவைச் சங்கம் அறிவிப்பு

கொழும்பு,செப்.2

எமது கோரிக்கைகளை நிறைவேற்றும்வரை தொழிற்சங்கப் போராட்டத்தைக் கைவிடமாட்டோம் என்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜெயசிங்க தெரிவிக்கையில்,

எமது முன்மொழிவுத் திட்டம் கட்டம் கட்டமாக நிறைவேற்றப்படும். அதற்கு இடைப்பட்ட காலத்தில் மாதம்தோறும் ஐந்தாயிரம் ரூபா வழங்கப்படும் என்று தீர்மானித்து அறிக்கைகள் விடப்பட்டுவருகின்றன. அதனை நாம் ஏற்கப்போவதில்லை.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் அரசிடம் மானியம் கேட்கவில்லை.

கடந்த 24 வருடங்களாக நாங்கள் போராடிக் கொண்டிருப்பது எமக்கான முழுமையான சம்பள உயர்வைப் பெற்றுக் கொள்வதற்காகவாகும். அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் சம்பள முரண்பாட்டைத் தீர்க்கவேண்டும் என்றுதான் நாங்கள் உறுதியாகப் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

எனவே தற்போது வழங்கப்பட்டுள்ள கரட் துண்டுகள் போன்ற தீர்வை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. தற்பொழுது எமது போராட்டம் முடிந்து விட்டதா? போராட்டத்துக்கு தீர்வு கிடைத்து விட்டதா? என்று சிலர் கேட்கின்றனர். நிச்சயமாக இல்லை. எமக்கு முழுமையான தீர்வாக நாம் முன்வைத்த சுபோதினி அறிக்கையின் ஊடாக சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். என்றார். (ஒ.4)



# 160 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்

முல்லைத்தீவு,செப்.2

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட எல்லைக் கிராமங்களில் 160 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. மருத்துவர் ஜெகஜீவனின் ஒழுங்குபடுத்தலில் இந்தப் பொதிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு, தெற்கு மற்றும் மத்தி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கே பொதிகள் வழங்கப்பட்டன. இவற்றுக்கான நிதி அனுசரணையை யாழ்.மருத்துவபீட பழைய மாணவர் சங்கத்தின் ஆஸ்திரேலியக் கிளையினர் வழங்கினர். (ஒ.4,13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று மாவட்டங்களுக்கும் பொதுவான தகனமேடை

## மாவட்டச் செயலர் கோரிக்கை



**முல்லைத்தீவு,செப்.2**

**கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை எரிப்பதற்கு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி பொதுவான எரிவாயு தகனமேடை அமைக்க வேண்டும். இதற்கு தனவந்தர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது கொரோனாத் தொற்றுப் பரவல் மற்றும் இறப்புக்கள் அதிகரித்து வருகின்றன. இதுவரை இங்கு 18 இறப்புக்கள் பதிவாகியுள்ளன.

இறந்தவர்களின் சடலங்களைத் தகனம் செய்வதற்கு வவுனியா மாவட்டத்தில் உள்ள எரிவாயுத் தகனமேடைக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் உயிரிழப்பவர்களையும் வவுனியாவில் உள்ள எரிவாயு தகனமேடையில் தான் எரிக்கின்றமை வழக்கம்.

இதனால் வீணான செலவுகளும், இட நெருக்கடிகளும் ஏற்பட்டுள்ளன. இவற்றை நிவர்த்தி செய்ய, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை ஒருங்கிணைத்து ஒரு மையமான பகுதியில் தகனமேடையை அமைக்க வேண்டும். -என்றார். (ஒ-4-19)

இடுப்பில் செருகியிருந்த

## சாராயப்போத்தல் குத்தி நபரொருவருக்கு காயம்

யாழ்ப்பாணம், செப். 2

இடுப்பில் சாராயப் போத்தலைச் செருகிக்கொண்டு சென்ற நபர் விபத்தில் சிக்கியபோது, சாராயப் போத்தல் குத்திக் காயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கச்சாய் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடந்தது. கச்சாய் வீதியைச் சேர்ந்த 32 வயதான நபரே காயமடைந்துள்ளார்.

உறவினரின் குடிபுகுதல் வீட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்பும்போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ம)



## ரூ.5 லட்சம் நிதியில் வீதிக்கு வெளிச்சம்

சாவகச்சேரி,செப்.2

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்பட்ட 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில், 13 ஆம் வட்டாரம் மற்றும் ஏனைய வட்டாரப் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தனது நிதி ஒதுக்கீட்டை இதற்கென வழங்கியுள்ளார்.

13 ஆம் வட்டாரத்துக்குரிய எழுதுமட்டுவாழ் வடக்கு, தெற்கு, கரம்பகம் மற்றும் உசன் வயல்வெளி பத்து வீட்டுத் திட்டப் பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. (ஒ-4-159)



சாவகச்சேரி எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, வீடுகளுக்கு நேரடியாகச் சென்று கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டது. (ஒ-4-159)

## குளத்தை ஆக்கிரமிப்பவர்களுக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடு

முல்லைத்தீவு, செப். 2

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் பாலக்கட்டுவான் குளத்தின் எல்லைப் பரப்புக்குள் அத்துமீறிக் காணிபிடிப்பவர்கள் தொடர்பாக முள்ளியவளை கமநல சேவை நிலையத்தால் முல்லைத்தீவுப் பொலிஸில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

பாலக்கட்டுவான் குளத்தை சிலர் ஆக்கிரமித்து விவசாய நடவடிக்கைகளை அடாத்தாக மேற்கொள்கின்றனர்.

இது தொடர்பில் அவர்களை ஏற்கனவே எச்சரித்தபோதிலும் இந்த அத்துமீறல் தொடர்ந்துகொண்டே உள்ளது. குளத்தின் எல்லைக்கல் தெளிவாக வரையறை செய்யப்பட்டு நடப்பட்டபோதிலும் ஆக்கிரமிப்பாளர்கள் அதைப் பிறிதொரு இடத்துக்கு நகர்த்தியுள்ளனர்.

ஏழு பேர்கொண்ட குழுவே இந்த அத்துமீறலில் ஈடுபட்டு வருகின்றது என்று பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-13)

## முக்கொம்பனில் கசிப்பு உற்பத்தி அசமந்தப் போக்கில் பொலிஸார்!

முக்கொம்பன் மாதர் சங்கம் குற்றச்சாட்டு

கிளநொச்சி, செப். 2

கிளிநொச்சி பூநகரி முக்கொம்பன் கிராமத்தில் அதிகரித்துள்ள கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்குப் பூநகரி பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை என முக்கொம்பன் மாதர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் மேலும் தெரிவிக்கையில், முக்கொம்பன் கிராமத்தில் கசிப்பு உற்பத்தி நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்தப் போதைப் பழக்கத்தால் குறித்த பகுதியிலும் அதை அண்டிய பகுதியிலும் குடும்பவன்முறைகள் அதிகரித்துள்ளன. மாணவர்கள் பலர் பாதிக்கப்படுகின்றனர். போதைக் கலாசாரம் தீவிரமாக ஊடுருவுகின்றது.

எனவே பொலிஸார் கூடுதல் அக்கறையுடன் இந்த விடயத்தைக் கையாள வேண்டும் -என்றுள்ளது. (ம-13)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 06 . 04 . 1982



மறைவு 01 . 09 . 2021

**ஸ்ரீகாந்தா சஞ்ஜீவன்**
(கழக உறுப்பினர்)

எமது கழக உறுப்பினர்களான சோபிகன், சஞ்ஜீவா (மகளிர் குழு), சோபிகா (மகளிர் குழு தலைவி) ஆகியோரின் சகோதரன் அமரர் ஸ்ரீகாந்தா சஞ்ஜீவன் அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு மிகுந்த துயர் அடைகின்றோம்.

அவரது மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியினை தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் அனைவர்க்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கொக்குவில்
வளர்மதி முன்னேற்றக் கழகம்
வளர்மதி நிறைவாழ்வகம்
சம்பியன் லேன், கொக்குவில்.**

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 18 . 10 . 1941



மறைவு 01 . 09 . 2021


**கந்தையா பழனிவேற்பிள்ளை**
(ஓய்வுநிலை அதிபர், கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டிதா வித்தியாசாலை, முன்னாள் கழக ஆலோசகர்)

எமது கழக உறுப்பினர்களான மதிமாறன் (மதி), திருமாறன் (மாறன்), இளமாறன் (இளங்கோ), மதிவதனா (மகளிர் குழு) ஆகியோரின் அன்புத் தந்தையும், எமது கழக முன்னாள் ஆலோசகருமாகிய அமரர் கந்தையா பழனிவேற்பிள்ளை அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைவதுடன்.. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்
வளர்மதி நிறைவாழ்வகம்
சம்பியன் லேன், கொக்குவில்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## குமாரசாமி கோணேஸ்வரன்

யாழ் நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் அரியாலை மற்றும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி கோணேஸ்வரன் அவர்கள் 30.08.2021 அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற குமாரசாமி, தங்கம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற பிரான்சிஸ்சேவியர், சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், சத்தியபாமாவின் அன்புக் கணவரும், வர்மன், வள்ளுவன், வருணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நகுலேஸ்வரி, சண்முகராசா, இராஜேஸ்வரி, கௌசலா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கணேசபிள்ளை, லலிதா, கணேசகுமார், சந்திரகுமார், றஞ்சன், றூபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராஜினி, பகீரன், சுறேன், கனி, கிசான், சோபன் ஆகியோரின் அன்பு மாமாவும் அனுஸ்காவின் அன்பு பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.09.2021 (திங்கட்கிழமை) அன்று கனடாவில் நடைபெறும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**சுப்பிரமணியம் வீதி**
**அரியாலை, யாழ்ப்பாணம்**
**0768058630, 0773947576.**

**தகவல்:**
**குடும்பத்தினர்,**

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 01 1951



இறப்பு 31 08 2021

## ஸ்டீபன் அரியராசா

**(ஓய்வுபெற்ற பொது சுகாதார பரிசோதகர் - யாழ்ப்பாணம் மாநகரசபை, மட்டக்களப்பு நகரசபை)**

யாழ் 5ஆம் குறுக்குத் தெருவை பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்ட ஸ்டீபன் அரியராசா கடந்த (31.08.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்டீபன் - சிசிலியா அவர்களின் அன்பு மூத்த மகனும், சிறிஸ்காந்தரூபி அவர்களின் நேசமிகு கணவரும், வி.தனுஜா, அ.கிறிஸ்ரீனா, ர.ஷயாமளா ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜிதரன், அருணன், ரஜனிகாந் ஆகியோரின் மதிப்பிற்குரிய மாமனாரும், மிகாண், ரோகித், ரித்தேஷ், ஷயாமினி ஆகியோரின் அன்பு அம்மப்பாவும், நேசராணி, அரியமலர், அற்புதமலர், மேரி மெற்றில்டா, இதயராணி, பாஸ்கரன், காலஞ்சென்ற ஜோன்சன் பிறேமாநந் (பிரபல இயேசுநாதர் நடிகன் - திருமறை கலா மன்றம்) அவர்களின் உடன் பிறந்த சகோதரனும், காலஞ்சென்ற சின்னராஜா, ஜீவரட்ணம், காலம்சென்ற தேவநாயகம், அலோசியஸ், விஜயராஜா, வின்சன் சொலமன், சந்தானநாயகி, சுகுணா ஆகியோரின் நேசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து (மட்டக்களப்பு) நேற்று (01.09.2021) மாலை 4.00 மணியளவில் சின்ன ஊரணி கிறிஸ்தவ மயானத்துக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**076 665 1811**

**தகவல்:**
**அலோசியஸ் குடும்பம்**
**பாஸ்கரன் குடும்பம்**


# ON-LINE FREE COURSES
## பிரிவு V

- DIPLOMA IN ENGLISH / SPOKEN ENGLISH
- DIPLOMA IN SINGALAM
- DIPLOMA IN ICT

★ காலம் : 3 மாதங்கள் ★ சான்றிதழ்
ஆரம்பம் : 04,05/09/2021, 09.30 AM


குறிப்பு:
★ பாடசாலை மாணவர்கள், அரச தனியார்துறை உத்தியோகத்தர்கள், மாணவர்கள் இணைந்துகொள்ள முடியும்.
★ ஆர்வமுடையவர்கள் 076 378 4109 Viber, Whatsapp, IMO ஊடாக இணைந்து பெயர், முகவரி, NIC இலக்கத்தினை பதிவு செய்தல் வேண்டும்.
★ வார, வார இறுதி Zoom Education

**IPS** to your future
**On-line Education Division Jaffna.**
**021 434 0229 / 076 685 2529**


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 29 . 11 . 1936



மறைவு 29 . 08 . 2021

## அமரர் வைத்திலிங்கம் கந்தசாமி

"கருணையைப் போற்றும் கண்ணிமையே
பேதங்கள் ஏதுமின்றி பகுப்புகள் யாதுமின்றி
உள்ளத்து சுடர்களின் ஊக்குவிப்பே
அன்பாலே அரவணைத்து அறிவாலே ஆக்கம்
தந்த மாசற்ற மணி விளக்கே"

சுதுமலையை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வைத்திலிங்கம் கந்தசாமி அவர்கள் 29.08.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.


அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொலைபேசி இலக்கம்**
**021 225 5358**
**077 660 2893**

**தகவல்:**
**சகோதரன் தம்பி**
**வன்னியசிங்கம்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 04 . 1925



மறைவு 28 . 08 . 2021

## திரு. வேலுப்பிள்ளை பரமநாதன் சண்முகநாதன்

வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் மற்றும் வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திரு. வேலுப்பிள்ளை பரமநாதன் சண்முகநாதன் அவர்கள் 28.08.2021 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும் இராஜேந்திரா, தவநாதன், ஜெயக்குமார், ரஞ்சினி, ராஜினி, ரோகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற திரு பஞ்சலிங்கம், டாக்டர் காங்கேசன், நந்தகுமார், கலைச்செல்வி, ஜோதினி, வனிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் லோஸன், ஹர்ஸன், சங்கரி சுரேஸ், சுரேஸ், டாக்டர் தாரணி ரமுனாகரன், ரமுனாகரன், கார்த்திகா, ஸைத்திரி, டாக்டர் பாபு, ஸமீஹா, டாக்டர் இந்து, கபிலன், கிருஷ்ணா, பிரியங்கா ,ரதினி, செந்தூரன் ஆகியோரின் அன்பு பாட்டனாரும் அஞ்சலிகா, அக்சரா, அபிஷ்ரஜா , ஆதிக்சிகா, ஸகானா, ஹியான், ஆகியோரின் அன்பு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிகிரியை 30.08.2021 அன்று கிருலப்பனை மயானத்தில் பிற்பகல் 2.30மணியளவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை சக ஆசிரியர்
**திருமதி.தனசோதி பாலசுப்பிரமணியம்**
அவர்களின் அன்புக் கணவர்

**திரு. தம்பு பாலசுப்பிரமணியம்**

அவர்கள் 30.08.2021 அன்று இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/பாஷையூர் சென் அன்ரனீஸ்
றோ.க.ம. வித்தியாலயம்.

# உவராக மாற்றமடையும் பொன்னாவெளி கிராமம்

## தடுப்பணையை புனரமைக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி,செப்.2

பூநகரியின் பூர்வீகக் கிராமமான பொன்னாவெளிக் கிராமத்தில் உவர்பரம்பலைத் தடுப்பதற்கு, நாகமுனை அணைக்கட்டை விரைவாக புனரமைக்க வேண்டும் என்று அந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மழை காலத்தில் கிராமங்களுக்குள் வரும் மேலதிக நீரை வெளியேற்றவும், கடற்பெருக்குக் காலத்தில் கடல்நீர் உட்புகாவண்ணமுமாக நாகமுனையில் அணைக்கட்டு அமைப்பு காணப்பட்டது.

அந்த அணைக்கட்டு தற்போது முழுமையாகச் சிதைவடைந்துள்ளது. இதனால் பொன்னாவெளிக் கிராமத்தின் நன்னீர்க் கிணறுகள் உவர் நீராக மாற்றம் பெற்றுள்ளன. மழை காலங்களிலும், கடற்பெருக்குக் காலங்களிலும் பொன்னாவெளியின் தெற்குப் பக்கமாகவுள்ள தரைவை முழுவதும் கடல்நீர் பரந்து காணப்படுகின்றது.

வலைப்பாட்டின் வடக்குப் பக்கமாகவுள்ள பெரும் பகுதி கடல்நீர் பரவிக் காணப்படும். இத்தகைய கடல்நீர் பரம்பல் எதிர்காலத்தில் வலைப்பாடு, வேரவில் ஆகிய கிராமங்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

2008 ஆம் ஆண்டு பொன்னாவெளி கிராமத்தில் இருந்து மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்துள்ளனர். எனவே பூநகரியின் பூர்வீகக் கிராமமான பொன்னாவெளிக் கிராமத்தை உவர்ப்பரம்பலில் இருந்து பாதுகாப்பதற்கு, நாகமுனை உவர்ப்பரம்பல் தடுப்பணையைப் புனரமைப்பதற்கு, கிளிநொச்சி மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-13)

**விதை நெல், தென்னங்கன்று, கொம்போஸ் விற்பனைக்கு**

தரச்சான்றிதழ் பெற்ற தரமான விதை நெல். (3 1/2. 4 மாதம்) 5 வருட தென்னங்கன்று. கொம்போஸ் என்பன மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு.

(அபி விவசாய பண்ணை, பளை)
தொடர்பு:
076 423 4816, 076 2327 457

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 14 . 03 . 1941



ஆண்டவன் திருவடியில் 31 . 08 . 2021

### திரு.பொன்னையா குகதாசன்

(Rtd. Senior Tax Officer)

சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையினை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு. பொன்னையா குகதாசன் (Rtd, Senior Tax officer) அவர்கள் கொழும்பில் 31.08.2021 செவ்வாய்க்கிழமை காலமானார்.,

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னையா அன்னபூரணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும். காலஞ்சென்ற கந்தையா தனலட்சுமி தம்பதியரின் மருமகனும். புவனலட்சுமியின் பாசமிகு கணவரும். பாமினி (WKK Engineering Company Pvt.Ltd). ரொமேஷன் (Commercial Bank. Pointpedro) ஆகியோரின் அன்புத் தந்தையும். ரமேஷ்குமார் (Astal Engineering, Brunei). பிரபாகரி ஆகியோரின் அன்பு மாமனாரும். புனிதராணி (Australia). காலஞ்சென்ற புவனராணி. குலதாசன் (Germani). குணதாசன் (Canada). புஸ்பராணி (America) ஆகியோரின் அருமைச் சகோதரனும். இராசரத்தினம் (Jaffna). குலசிங்கம் (Canada). மீனாம்பிகை (Germany). திலகவதி (Canada). சண்முகதாஸ் (America) ஆகியோரின் அன்பு மைத்துனரும். ஆரணி. ஆத்விக். அக்ஷித் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.09.2021) Jawatta பொது மயானத்தில் இடம்பெற்றது. இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

Skyline, No.24, Daya Road, Colombo-06
No.40, Champion Lane, Kokuvil.

தகவல்: குடும்பத்தினர்.
077 130 4642, 077355 3001

## மரண அறிவித்தல்



### திரு. கந்தையா பழனிவேற்பிள்ளை

(ஓய்வுநிலை அதிபர் கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாலயம், உதவிக் கல்விப்பணிப்பாளர், திட்டமிடல் பிரிவு, துனுக்காய் வலயம்)

மண்டைதீவு 2ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் சம்பியன் லேன் கொக்குவிலை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பழனிவேற்பிள்ளை அவர்கள் நேற்று (01.09.2021) புதன்கிழமை அதிகாலை இயற்கை எய்தினார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சிவசோமசேகரி தம்பதியரின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், தவநிதி அவர்களின் ஆருயிர் கணவரும் கிருஸ்ணதேவியின் அண்ணனும், மதிமாறன் (முன்னாள் வெளிக்கள உத்தியோகத்தர் ICRC), திருமாறன் (சுவிஸ்), மதிவதனா (லண்டன்- முன்னாள் தாதிய உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை), இளமாறன் (முன்னாள் வெளிக்கள உத்தியோகத்தர் ICRC-சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தினி, சுரேக்கா, யோகானந்தம், சுபத்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், எழினி, தேன்நிலா, இளநிலா, வர்னிகா, ராம்மாறன், லவமாறன், சுபமாறன், கர்னிகா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், அமரர்களான பதுமநிதி, சங்கநிதி ஆகியோரின் அருமை மைத்துனரும், அருணாசலம் (லண்டன்), காலஞ்சென்ற தபானந்தம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.09.2021) அவரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

84/11, சம்பியன் லேன்,
கொக்குவில்.

தகவல்:
ப.மதிமாறன் (மகன்)
077 955 9442

## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் விக்கினேஸ்வரமூர்த்தி

கட்டுவன் ஊரங்குனையை பிறப்பிடமாகவும் கொக்குவில் பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் விக்கினேஸ்வரமூர்த்தி நேற்று (01.09.2021) கர்லமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் அன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், ரவீந்திரன் (ஜேர்மனி), அன்னலிங்கம் (கனடா), அரியமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலாவதி, அகிலா, காலஞ்சென்ற மகாலிங்கசிவம் ஆகியோரின் மைத்துனரும், மாதவன், மதுரன் ஆகியோரின் மாமனாரும், அகிலேஸ், அபினாஸ், அச்சஜன், அபிசன், அனுஷ்கா, அஜானி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2021) முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

68, பிரம்படி லேன்,
கொக்குவில்.

தகவல்:
ம.அரியமலர் (தங்கா)
076 908 6692

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 02 . 1940



இறப்பு 01 . 09 . 2021

### மில்பர் ராஜன்(J.P)

(முன்னாள் இலங்கை போக்குவரத்துச் சபை முகாமையாளர், கொய்யாத்தோட்டம் சி.க.கூ. தலைவர்)

மன்னாரை பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மில்பர் ராஜன் நேற்று (01.09.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பெல்சியாவின் அன்புக் கணவரும், ஏஞ்சல் ராஜன் (றோய்) டெல்பின்ஜெயா, ரஜனிஸ்ராஜன், மெடோனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.09.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25/2, இரண்டாம் ஒழுங்கை,
பால்குளம், கொய்யாத்தோட்டம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாண மாவட்டத்தில், கைதடி அரச முதியோர் இல்லத்தில் உயிரிழந்த முதியவர் ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்ற 32 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவர் கொரோனாத் தொற்றுடன் குழந்தை பிரசவித்து 10 நாள்களின் பின்னர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த கொக்குவிலைச் சேர்ந்த 39 வயதுடைய பெண் ஒருவரும் இருபாலையைச் சேர்ந்த 81வயதுடைய ஆண் ஒருவரும் கொக்குவிலைச் சேர்ந்த 75 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

மந்திகை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பருத்தித்துறையைச் சேர்ந்த 80 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 91 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலம் மந்திகை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறிப்பட்டது.

உடுவிலில் 74 வயதுடைய ஆண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அவரது சடலம் தெல்லிப்பழை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் வரும் ஞாயிற்றுக்கிழமை மின் தகனம் செய்யப்படும் என்று உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 259ஆக உயர்வடைந்துள்ளது.

**வவுனியா**

கொரோனாத் தொற்றால் வவுனியாவில் நேற்று 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் 6 பேர் சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டபரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து மருத்துவமனையின் கொரோனா விடுதியில் அவர்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்தனர்.

60 வயதுக்கு மேற்பட்ட இருவரும் தொற்றால் உயிரிழந்தனர்.

மற்றையநபர், அவருடைய வீட்டில் உயிரிழந்திருந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவர்களை எரியூட்டுவதற்கான நடவடிக்கைகளை சுகாதார பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவத்தில் கல்மடு,தோணிக்கல், மகாறம்பைக்குளம், ஆசைப்பிள்ளையார் குளம், வேப்பங்குளம் மற்றும் மூன்று முறிப்பு மற்றும் இறம்பைக்குளம் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே உயிரிழந்துள்ளனர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை,

வடக்கில் பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 72 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, இனங்காணப்பட்ட தொற்றாளர் விவரம் வருமாறு: யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 9, முல்லைத்தீவு இராணுவ இடைத்தங்கல் நிலையம் மற்றும் வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தலா 7, முள்ளியவளை இடைத்தங்கல் நிலையத்தில் 1, காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 1, வவுனியா விமானப்படை முகாம் 6, வெள்ளாங்குளம் விமானப்படை முகாம் 3, வவுனியா மாவட்ட பொது மருத்துவமனை 5, மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை 3, செட்டிகுளம் ஆதார மருத்துவமனை மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனை தலா 1, மல்லாவி ஆதார மருத்துவமனை 6, புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனை 2, கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை மற்றும் ஒட்டுசுட்டான் பிரதே மருத்துவமனை தலா 1, தெல்லிப்பழை ஆதார மருத்துவனை 5, சாவகச்சேரி ஆதார மருத்துவனை 2, கோப்பாய் பிரதேச மருத்துவமனை 8, ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை 1, பருத்தித்துறை ஆதார மருத்துவமனை 2. (த-26,110)

## தொற்று...

ளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை மொத்தமாக 4 இலட்சத்து 44 ஆயிரத்து 130 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 60 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 76 ஆயிரத்து 216 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## 115 ஆண்கள்...

கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்து 604 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 100 பெண்களும், 115 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-22)

## மருதனார்மடத்தில்...

சம்பவத்தில் படுகாயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தையடுத்து பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

கழுத்து மற்றும் காலில் பலத்த வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 பேர் கொண்ட கும்பலே ஊரடங்கு வேளையில் தாக்குதலை நடத்தியுள்ளது.

குறித்த நபர் மீது முன்னரும் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்திய சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் உள்ள நிலையில் மீண்டும் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (த-26)

## அவசரகாலச்...

சூழ்நிலையின் அடிப்படையில் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் பகுதி 2ஐ நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஜனாதிபதி அவசரகால நிலைமையை அறிவித்தார் என்று தெரிகின்றது.

பொதுமக்கள் பாதுகாப்பு என்று பெயர் குறிப்பிடுவது போல், தொற்றுநோயால் ஏற்படும் சூழலைவிட பொதுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் சூழ்நிலைக்கு அதன் ஏற்பாடுகள் மிகவும் பொருத்தமானவை.

மறுபுறம், 2005ஆம் ஆண்டின் சட்டம் எண் 13, இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டம் குறிப்பாக தொற்றுநோய் உள்ளிட்ட வரையறுக்கப்பட்ட பேரழிவு சூழ்நிலைகளைச் கையாள வடிவமைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், உலக சுகாதார அமைப்பு கொரோனாவை உலக தொற்றுநோயாக அறிவித்து கிட்டத்தட்ட 18 மாதங்களுக்குப் பிறகு இலங்கை அனர்த்த முகாமைத்துச் சட்டத்தின் கீழ் நாட்டில் பேரிடர் நிலைமை இருப்பதாக ஜனாதிபதி அறிக்கை ஒன்றைக்கூட வெளியிடவில்லை.

ஜனாதிபதி தலைமை வகிக்க முடியுமான ஏற்பாடுகள் உள்ள இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தில் தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையைக் கொண்ட செயலணியை நிறுவுவதற்கான ஒரு வழிமுறை இருப்பதை நாங்கள் அதில் காண்பதோடு, அத்தகைய செயலணியை ஜனாதிபதி நிறுவத் தவறிவிட்டார். மாறாக, தற்போதுள்ள சட்டக் கட்டமைப்புக்கு புறம்பாக ஒரு 'ஜனாதிபதி செயலணி' உருவாக்கும் பாதை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலுக்கு 18 மாதங்களை எட்டும் நிலையில், தொற்றுநோயைக் கையாள அரசு தொடர்புடைய சட்டங்களைச் செயற்படுத்தத் தவறிவிட்டது. இந்த நோக்கத்துக்காக பல நாடுகள் சிறப்பு சட்டங்களைக்கூட இயற்றி செயற்பட்டுள்ளன.

இந்தநிலையில், பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலை அறிவிக்கப்படவில்லை என்பதோடு இந்த அறிக்கையை வெளியிடுவது குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மேலும் தவறாகச் சித்தரித்து சர்வாதிகாரத்தை நோக்கி மேலும் நகரும் என்ற உள்நோக்கத்துடன் கூறப்பட்டுள்ளதா என்பதிலும் நாங்கள் கூடிய கவனம் கொண்டுள்ளோம்.

அவசரகால நிலை என்று அழைக்கப்படுவது வீணாகவும் குடிமக்களின் அடிப்படை உரிமைகளை தொடர்ச்சியாகவும் தவறாகவும் கட்டுப்படுத்துவதன் மூலம் சர்வாதிகாரத்தைத் தொடர வேண்டும் என்ற ஆழ்மன நோக்கத்துடன் உள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றோம்" என்றுள்ளது. (த-22)

## அம்பனில்...

டன. இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து அவற்றைச் செயலிழக்கச்செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-26)

## நயினை...

செப்ரெம்பர் 06 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தற்போதும் நாட்டில் கொரோனாத்தொற்றுப் பரவல் அதிகரித்துச் செல்வதால், முன்னர் ஒத்திவைக்கப்பட்டதைப் போன்று இந்த மாதம் 06ஆம் திகதி மஹோற்சவத்தை நடத்த முடியாத நிலை தோன்றியுள்ளதாக நயினாதீவு கோவில் அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (த26)

## 24 மணித்தி...

ளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

அவர்களில் 16 பேர் பி.சி.ஆர். பரிசோதனையிலும் 270 பேர் அதிவிரைவு அன்டிஜென் பரிசோதனையிலும் கண்டறியப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 85 பேரும், யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 48 பேரும், கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 14 பேரும், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 19 பேரும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 41 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

காரைநகரில் 9 பேரும், நல்லூரில் 14 பேரும், சண்டிலிப்பாயில் 8 பேரும், உடுவிலில் 11 பேரும் தெல்லிப்பழையில் 2 பேரும், பருத்தித்துறையில் 28 பேரும், மருதங்கேணியில் 4 பேரும், ஊர்காவற்றுறையில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வருடம் மார்ச்சிலிருந்து நேற்று மாலை வரை 12 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் ஆயிரத்து 161 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 739 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (த-26)

## இரு நாள்களே...

ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் எதிர்வரும் 06 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், கொரோனா நெருக்கடி நிலைமையால் ஒன்று அல்லது இரு நாள்களுக்கே இந்த தமுறையும் சபை கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.. அதற்கேற்ற வகையிலேயே இன்று தீர்மானம் எடுக்கப்படலாம். (த-44)

## அன்டிஜெனில்...

பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

அவற்றில் அதிகளவாக சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 42 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையில் 24, யாழ்ப்பாணம், கரவெட்டி மற்றும் கோப்பாயில் தலா 11, உடுவில் 10, காரைநகர் 21, மருதங்கேணி 7, ஊர்காவற்றுறை 4, நல்லூர் 7, வேலணை 13 பேர் என 161 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். (த-5)

## முல்லையில்...

ழந்த நிலையிலும் அவர்கள் கொரோனாத் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பகுதியைச்சேர்ந்த 73 வயதுடைய பெண்ணும், 07ஆம் வட்டாரம் சிவநகர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஒருவரும், தேவிபுரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 79 வயதுடைய ஒருவரும், வெலிஓயா பகுதியைச் சேர்ந்த 83 வயதுடைய ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, மாவட்டத்தில் இனங்காணப்பட்ட 41 பேரில், ஒட்டுசுட்டான்11, மல்லாவி1, மாங்குளம்8, புதுக்குடியிருப்பு12, முல்லைத்தீவு03, முள்ளியவளை06 பேர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா – இங்கிலாந்து 4ஆவது டெஸ்ட் இன்று!

ஓவல், செப். 2

**இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டம் இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது. மூன்று ஆட்டங்கள் முடிவடைந்த நிலையில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியுடன் உள்ளன.**



இந்த நிலையில் இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி தொடரில் தன் இருப்பைத் தக்கவைக்கும் என்பதால், இந்த ஆட்டத்தின் மீது பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

முதல் மூன்று ஆட்டங்களுக்கான அணியில் இருந்து நீக்கப்பட்ட அஸ்வின், இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தில் களமிறங்க வாய்ப்பு உள்ளது. கடந்த ஆட்டத்தில் களமிறங்கிய இந்திய அணியில், இசாந் சர்மா நீக்கப்பட்டு அஸ்வின் களமிறக்கப்படலாம். அதேநேரம் இங்கிலாந்து அணியில் பெருமளவு மாற்றங்கள் இருக்க வாய்ப்பில்லை.

**அஸ்வினை எதிர்கொள்ள தயாராகவே உள்ளோம்**

இன்று ஆரம்பமாகும் நான்காவது டெஸ்ட் ஆட்டம் தொடர்பில் இங்கிலாந்து அணித் தலைவர் ரூட் கருத்துத் தெரிவித்துள்ளார். அதில், விராட் கோலி உலகத்தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர் என்பதில் சந்தேகமில்லை. இந்தத் தொடரில் அவரைப் பெரிய அளவில் ஓட்டங்களை எடுக்க விடாமல் வீழ்த்திய வகையில் எல்லா பெருமையும் எங்களது பந்து வீச்சாளர்களையே சாரும். இப்போது அவரை வீழ்த்தும் வழிமுறையை நாங்கள் கண்டறிந்துள்ளோம். அடுத்து வரும் போட்டிகளிலும் இதே முயற்சியில் அவருக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுப்போம்.

அடுத்த டெஸ்டில் இந்திய அணியில் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் சேர்க்கப்பட வாய்ப்பு உள்ளது. அவர் உலகத்தரம் வாய்ந்த வீரர். எங்களுக்கு எதிராக விக்கெட் வீழ்த்தியது மட்டுமின்றி ஓட்டங்களையும் எடுத்துள்ளார். டெஸ்டில் அவரது திறமை என்ன என்பதை நாங்கள் அறிவோம். அதற்கு ஏற்ப நாங்கள் தயாராக இருக்கிறோம்- என்றார். (ம)

**German, Holland (Netherland) Swiss, Ostria**

நாடுகளுக்கான மொழிவகுப்புகள் German Embassy யின் A1 Certificate க்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.
தொடர்புகளுக்கு: **Mrs.P.Kajenthini**
**T.P: 077 160 4823**
**Jaffna.**

**English Classes**
**Zoom மூலம்**
Gr-5 to O/L
(பிரத்தியேக வகுப்புக்கள்)
**T.P: 077 3314 608**

**காணி விற்பனைக்குண்டு**

நீர்வேலி தெற்கு கரந்தன் பகுதியில் 11 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு 1 1/2 பரப் பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 M தூரம்.
பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை. (தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
**077 814 7389, 077 614 7333**

**கண்ணீர் அஞ்சலி**

**தம்பு பாலசுப்பிரமணியம் (பாலா)**

**(இலங்கை மின்சார சபை யாழ்ப்பாணம்)**



நீதிமன்ற வீதி, மல்லாகத்தை பிறப்பிடமாகவும் மத்தியூஸ் வீதி சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் காலம் சென்ற தம்பு-இலட்சுமியின் மூத்த மகனுமான தம்பு பாலசுப்பிரமணியம் 30.08.2021 அன்று காலமானார்.
அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (02.09.2021) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் ஓட்டுமடத்திலமைந்துள்ள கோம்பயன் இந்து மயானத்தில் இடம்பெறும் என்பதனை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**நீதிமன்ற வீதி, மல்லாகம்.**
**077 9977 254**

**பிரிவால் வாடும் சகோதரர்கள்,**



# தரப்படுத்தலில் ரூட் முதலிடம்

லண்டன், செப். 2

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலில் இங்கிலாந்து அணித்தலைவர் ஜோ ரூட் முதலிடம் பிடித்தார். இந்தியாவுக்கு எதிராக முடிவடைந்த மூன்று ஆட்டங்களிலும் சதம் விளாசியுள்ளார் ரூட். அவர் 916 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளார். முதலிடத்தில் இருந்த நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சன் 901 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டார். சிமித் 891 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், லபுஸ்சேன் 878 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் உள்ளனர். ரோகித் சர்மா ஓர் இடம் முன்னேறி ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளார். கோலி ஓர் இடம் சரிவு கண்டு 6ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டார். இதன்படி ரோகித் 773 புள்ளிகளையும், கோலி 766 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

பாபர் அசாம் 749 புள்ளிகளுடன் 7ஆவது இடத்திலும், வார்னர், குயின்டன் டி ஹொக், நிக்கொல்ஸ் முறையே அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளனர். (ம)

# ஸ்ரெய்ன் ஓய்வு



ஜோகன்ஸ்பெர்க், செப். 2

தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் அனைத்து விதமான கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்தும் ஓய்வை அறிவித்தார். தனது 38ஆவது வயதில் இந்த ஓய்வு முடிவை ஸ்ரெய்ன் அறிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு டெஸ்ட் ஆட்டங்களில் அறிமுகமான ஸ்ரெய்ன் 2019ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடினார். 26 தடவைகள் 5 இலக்குகளை ஸ்ரெய்ன் கைப்பற்றியுள்ளார். 93 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 439 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். 125 ஒருநாள் போட்டியில் 196 இலக்குகளையும், 47 ரி20 போட்டியில் 65 இலக்குகளையும் கைப்பற்றியுள்ளார். (ம)





இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தத் தொடருக்காக நேற்று இரு அணிகளும் கடுமையான பயிற்சியில் ஈடுபட்டன. இலங்கை கிரிக்கெட் சபை இரு அணிகளின் வீரர்களும் கடுமையான பயிற்சியில் ஈடுபடும் ஒளிப்படங்களை வெளியிட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.